விலை - 50/-

# தென்றல்
# THENDRAL



இதழ் : 01 2008 பக்கங்கள் : 40



## உள்ளே....

- மட்டக்களப்பு மாநாட்டில் பாரம்பரிய கூத்துக் கலை

"தோன்றிற் புகழுடன் தோன்றுக"

- வாழ்வாங்கு வாழ்ந்த வீ.சு. கதிர்காமத்தம்பி

தேசிய பல்சுவை கதம்ப சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்றல்" சஞ்சிகை வெளிவருவதற்கு எமது
மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்


LG Life's Cood

# Abans

## Show Room

LG, JVC, HAIER, HOOVER, ELECTROLUX,
TOYOSTAR, JAIPAN.....EXT


(சின்ன ஆஸ்பத்திரிக்கு முன்பாக)



குளிசாதனப்பெட்டி

தொலைக்காட்சிப் பெட்டி

சலவை இயந்திரம்



கணனி இயந்திரம்

மைக்ரோ வேவ்

குளிரூட்டி மற்றும்பல.....





**175, Trinco Road,**
**Batticaloa**
**T.P/Fax. 065-2226988**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34/1, பழைய கல்முனை வீதி
கல்லடி
மட்டக்களப்பு

**பிரதம ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர்குழு**
டாக்டர் எம். கந்தசாமி
திருமதி. சிறிதேவி சங்கர்
திரு. கே. வாமதேவன்
திருமதி. கவிதா கிருபாகரன்

**ஆலோசகர்**
திரு. வீ. கே. ரவீந்திரன்

**கணனிவடிவமைப்பு**
**பிரின்டிங்**
கணா டிஜிட்டல் பிரின்டிங்
143, திருமலை வீதி
மட்டக்களப்பு

# ஆதரவு தாரீர் !

மட்டக்களப்பில் காலத்துக்குக் காலம் பல்வேறு சஞ்சிகைகள் வெளிவந்து சில காலம் தமது பணியை செய்து விட்டு வாடிவிடுகின்றன.

இந்நிலையில் உங்கள் அபிமான "தென்றல்" சஞ்சிகை பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தனது பணியை ஆற்றி வந்திருப்பதை கடந்த காலங்களில் வெளிவந்த இதழ்கள் பறைசாற்றும்.

இந்த வகையில் பல புதிய பரிமாணங்களுடன் கையடக்க வடிவிலான சஞ்சிகையாக "தென்றல்" தனது இதழை தேசிய ரீதியாக இன்று முதல் அகல விரிக்கிறது.

இவ் இதழ் வெளிவர ஆக்கங்கள் தந்துதவிய "தென்றல்" அபிமான எழுத்தாளர்கள், தென்றலின் முதுகெலும்பாக இருக்கும் விளம்பரதாரர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களையும் எண்ணிப் பார்க்கிறோம்.

இவற்றுக்கும் மேலாக எமது "தென்றல்" இதழ் கடந்த காலங்களில் வெளி வந்தபோது ஆதரவு காட்டிய வாசகர்கள் தொடர்ந்தும் எமக்கு ஆதரவு புரிவார்கள் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

என்றென்றும்
அன்புடன்
பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தென்றல்" உலகெலாம் பரவட்டும்!

"தென்றல்" சஞ்சிகை மட்டக்களப்பு மாவட்ட மக்களின் கலை உணர்வுகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்தவகையில் இன்று தனது இனிய இதழினூடாக மக்களின் கரங்களில் தவழும் "தென்றல்" சஞ்சிகை புதுப் பரிமாணங்களுடன் வெளி வருகிறது.

கால ஓட்டத்தில் நாளுக்குநாள் உலகில் நிகழும் பல்வேறு பரிமாணங்களுக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் இச் சஞ்சிகை பிரசவிக்கிறது.

இந்நிலையில் இனிவரும் காலங்களிலும் "தென்றல்" சஞ்சிகை பல்வேறு தரப்பினரையும் கவரும் வகையில் வெளிவர எல்லாம் வல்ல பரம்பொருளை அனைவரும் இணைந்து பிரார்த்திப்போமாக.

இவ்வண்ணம்
**சீ. யோகேஸ்வரன்** (தலைவர்)
(மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை.)

---

## தென்றல் வெற்றி நடை போடட்டும்!

தென்றல் என்றாலே
பூரிப்படையாதோர் யார்தான் இலர்

ஆனால் நோயுற்றோர்க்கு
அது கூட விரோதிதான்
உச்சிமுதல் உளங்கால்வரை
உடலெல்லாம் மூடி முக்காடுபோட்டு
வீசும் இதமான தென்றலே
ஜென்ம விரோதி தமக்கென
அடம்பிடிக்கும் இன்னோர்க்கு
என் செய்வோம்! நாம் என்செய்வோம்!

ஊடகத்தை உடைக்கலாம்
அத்துறை சார்ந்தோனைக் கொல்லலாம்
ஆனால் உண்மையைக் சொல்லலாமா?

காற்றை, மழையை, வெயிலை,
இனிய பால் நிலவின் ஒளியை
இயற்கையின் எழிலை எவர்தான்
அடக்குவார்? ஒடுக்குவார்? ஏலுமா?
தென்றல் உடலைத் தொட்டது
உள்ளம் நெகிழ்ந்தது
உணர்வும் பிறந்தது
முடங்கிக் கிடந்த
ஊடக நங்கை
மனம் கவர்ந்த

"தென்றல்" சஞ்சிகை
வெளிவந்து விட்டாள்
மீன் பாடும் தேனாட்டில்
தனி ஒரு சக்தியாய்
ஊடகத்துறைக்கு
சத்தியமெனும் சான்றுபகர
வாழ்த்துகின்றோம்!
நல்லாசீர் கூறுகின்றோம்
துணிவுடன் "தென்றல்"
வெற்றி நடைபோட

**இயேசு சபை யோசேப் மேரி சுவாமிகள்**
**புனித இஞ்ஞாசியார் ஆலயம்**
**கல்லடி டச்சார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தென்றல்" மீண்டும் தனது பணியை தொடரட்டும்!

## தென்றல் பத்திரிகை மீண்டும் மக்களுக்கு அறிவுகளை அள்ளி - வழங்க வெளிவருவதையிட்டு எனது நல்லாசிகள் அல்ஹம் துல்லாஹ்


சமூகத்துக்கு தேவையான கலை, கலாசார, விஞ்ஞான சமூக அறிவுரைகளை சகல தரப்பினரும் பயின்றுகொள்ள ஆக்கபூர்வமாக, அபூர்வமாக வழங்கும் ஒரு சிறப்புச் சாதனமாகத்தென்றல் பத்திரிகை வெளிவருவதை பாராட்டுகிறேன்.


எமது நாட்டில் இன்று சற்று சீர் குலைந்துள்ள இன உறவு, ஒன்றுமை, புரிந்துணர்வு, சாந்தி, சமாதானம் என்பன சீரடையவும் நிலை நாட்டவும், வளரவும் தென்றல் பத்திகை வருங்காலங்களில் தங்கு தடையின்றி சீரான சேவையை தொடர எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவாணாக என பிரார்த்திக்கின்றேன்.

ஆமீன்

மௌலவி. AMM முஜிப் (ஷர்கி)
**பிரதம இமாம்**
**மட்டக்களப்பு நகர**
**பள்ளிவாசல்**


**சண் வீடியோ**



**29/1 மத்தியஸ் வீதி, மட்டக்களப்பு.**
தொலைபேசி இலக்கங்கள்
065-2225792, 060-2656996, 071-6165795

**திருமண வைபவங்களா? பூப்புநீராட்டு விழாக்களா? பிறந்த தினக் கொண்டாட்டங்களா? மற்றும் சகல வித வைபவங் களுக்குமான வீடியோ படப்பிடிப்பை தெளிவாக மேற் கொள்ள இன்றே நாடுங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்தரின் வரலாறும் கல்விப் பணியும்

தாம் கற்றகல்வியைப் பயன்கொண்டு, செயற்கரிய செயல்கள் பலவற்றை ஆற்றி, அழியாப்புகழைத் தமதாக்கிச்சென்ற பெரியார்களுள், விபுலாநந்த அடிகளார் தனித்துவமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கையின் மட்டக்களப்புத் தமிழகத்தைச் சேர்ந்த காரைதீவு என்னும் கிராமத்திலே 1892 ஆம் ஆண்டு மேய்த்திங்கள் மூன்றாம் நாளில் விபுலாநந்த அடிகளார் பிறந்தார். இவருக்கு மயில்வாகனன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

கருவிற் திரு அமையப் பெற்ற அடிகளாரிடம், அதி தீவிர விவேகமும், அபார ஞாபகசத்தியும் இயல்பாகவே குடிகொண்டிருந்தன. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இலத்தீன், பாளி, சிங்களம், மலையாளம், அரபு, வங்கம் முதலிய பன்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த அடிகளார், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞான டிப்ளோமா தமிழ்ப்பண்டிதம், பி. ஏஸ், சி (B. S. C) என்னும் பட்டங்களைப் பெற்றவராகவும் விளங்கினார்.

தமிழ். வடமொழி, ஆங்கிலம், பிரஞ்சு, மலையாளம், தெலுங்கு முதலிய பலமொழிகளையும் நன்கு அறிந்திருந்த காரணத்தாலேயே "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என மகாகவி சுப்பிரமணிய பாரதியாராற் பாடமுடிந்தது. அவ்வாறே ஏராளமான மொழிகளிலே அறிவு பெற்றிருந்த அடிகளாராலும் தமிழ்மொழியின் தனித்துவமான இனிமையை உணர முடிந்தது. தெய்வத்தமிழின் இனிமையும், தொன்மையும், இளமையும் இலக்கிய, இலக்கண வளமும் அவரைச் செயல் மறந்து அதனைப் போற்றச் செய்தன. அவர் தமிழைக் கற்றார்; மென்மேலும் கற்றார்; துறைபோகக் கற்றார். இதன் விளைவாக எண்ணிலடங்கா ஆராய்ச்சிக்கட்டுரைகள் எழுதப்படலாயின. இவை மதுரைத் தமிழ்ச்சங்க ஏடாகிய செந்தமிழ், கரந்தைத் தமிழ்ச் சங்க ஏடாகிய தமிழ்ப்பொழில், இராமகிருஷ்ணவிஜயம் விவேகானந்தன், கலைமகள் முதலிய பல இதழ்களிலும் வெளிவந்து அறிஞர்களின் பாராட்டைப் பெற்றன.

ஆடிகளாரின் ஆங்கிலமொழிப் புலமை, தமிழ் மொழிப் புலமைக்கு எவ்வகையிலும் குறைந்ததன்று. ஆங்கிலமொழிப் புலமையையும் அவர் ஆக்கபூர்வமான பலவழிகளிற் பயன்படுத்தியுள்ளதைத் காணலாம்.

**"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்**
**சொல்வதிலோர் மகிமை இல்லை**
**திறமான புலமையெனில் வெளிநாட்டோர்**
**அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-என்று பாரதியார் கூறியமைக்கமைய, தமிழ்மொழியின் உயர்வினை வெளிநாட்டோரும் அறிந்து வணக்கஞ் செலுத்திடச் செய்வதில் அடிகளார் அரும்பணி ஆற்றியுள்ளார்

வேதாந்தகேசரி, பிரபுத்தபாரத என்னும் இராமகிருஷ்ணசங்க ஆங்கில இதழ்களின் ஆசிரியராகப் பதவி வகித்த அடிகளார், அவ்விதழ்களில் எழுதிய ஏராளமான கட்டுரைகளின் மூலமும், பல்வேறு ஆங்கில மொழி இதழ்களில் எழுதிய சிறப்புக்கட்டுரைகளின் மூலமும், தமிழ்மொழியின் திறமான புலமையினை வெளி நாட்டோரும் அறிந்திட வழி சமைத்துள்ளார். தமிழ் இலக்கிய, இலக்கண வளங்கண்ட வெளிநாட்டோர். ஆதற்குரிய வணக்கத்தைச் செலுத்திட முந்தி நின்றனர்.

ஆங்கில இலக்கிய வளத்தினையும், கிரேக்க, உரோம எகித்திய நாகரிகங்கள் வழங்கிய மேற்றிசைச் செல்வத்தினையும் தமிழ் பேசும்மக்கள் அறிந்திடச் செய்வதற்கும் அடிகளாரது ஆங்கில மொழி அறிவே உதவிற்று. பிறமொழிச் சான்றோர்களின் உயரிய படைப்புகளைத் தமிழிற் பெயர்த்துத் தந்திடவும் அடிகளாரின் ஆங்கில மொழிப் புலமையே உதவியாக அமைந்தது.

அடிகளார் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் மொழிகளிற் தமக்கிருந்த புலமையைக் கொண்டு மேற்கொண்ட ஆராய்ச்சியின் பெறுபேறாக 'மதங்க சூளாமணி' என்னும் நாடகத்தமிழ் நூல் ஆக்கப்பட்டது. இஃது ஆங்கில மொழிப் புலவரான தனஞ்செயனாரின் வடமொழி நாடக அமைதியையும் ஆய்ந்தறிந்து அவ்வழியிலே தமிழ் நாடக அமைதியை விளக்கி நிற்கிறது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின், பண்டித பரீட்சையிற் தேறிய முதல் இலங்கையரான அடிகளாரால் எழுதப்பட்ட மதங்க சூளாமணியை அச்சங்கத்தினரே 1926ல் வெளியிட்டு வைத்தனர்.

கணிதம். பௌதிகம் ஆகியவற்றிற் பெற்றிருந்த பேரறிவையும், தமிழ், சமஸ்கிருதம் முதலிய மொழிகளிற் பெற்றிருந்த பெரும் புலமையையும் பயன்கொண்டு. பதினான்கு ஆண்டுகளாக மேற் கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக அடிகளாரால் ஆக்கியளிக்கப்பட்டதே 'யாழ்நூல்' என்னும் இசைத்தமிழ் நூலாகும். இவ்வரிய நூலினை ஆக்குவதற்குத் தேவைப்பட்ட, கருநாடக சங்கீத அறிவினை விபுலாநந்த அடிகளார் முறைப்படி கற்றுப் பெற்றுக்கொண்டார் என்பதனை அறியும் போது, நமக்கு வியப்புத் தோன்றுகிறதல்லவா? யாழ்நூலானது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் 1947ஆம் ஆண்டு ஜீன் திங்களில் வெளியிட்டு வைக்கப்பட்டது

அடிகளாரின் பல்கலை ஆற்றலையும், நிறைந்த புலமையையும். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர் தக்க முறையிற் பயன் படுத்தியுள்ளனர்.

**"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;**
**மெத்த வளருது மேற்கே - அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"**

- என்று தேசிய கவி பாரதியார், சுட்டிக்காட்டிய குறையினைப்போக்கி, பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் புத்தம் புதிய கலைகள் தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைத் தமிழ் மொழியில் ஆக்குவதற்குத் தேவைப்படும் கலைச் சொற்களை ஆராய்ந்து கண்டறிவதன் அவசியத்தை உயர்ந்தசென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர், 1934 இல் சென்னை மாநகரில் மாநாடொன்றினை அடிகளாரின் தலைமையில் நடத்தினர்.

மேற்படி மாநாட்டிலே கணிதம், பூதநூல், வேதிநூல், மரநூல், விலங்குநூல், உயிரியலும் உடனலவிலும், பூகோளம், வரலாறு, வேளாண்மை என்னும் ஒன்பது பிரிவுகளை உள்ளடக்கிய "கலைச் சொல்லாக்கக்கழகம்" என்னும் ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. இந்த அமைப்பின் பொதுத்தலைவராகவும், வேதிநூற் பிரிவின் சிறப்புத் தலைவராகவும் விபுலாநந்த அடிகளார் தெரிவு செய்யப்பட்டார்.

கலைச் சொல்லாக்கக்கழகம் தயாரித்த பதினாயிரம் சொற்களைக் கொண்ட நூலானது, சென்னை மாகாண முதலமைச்சராயிருந்த பேரறிஞர் இராஜாஜி அவர்களது முன்னுரையுடன், "கலைச் சொல்லகராதி" என்னும் பெயரில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் 1938 ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

*கனடாவிலிருந்து*
*வித்துவான், தமிழ்ஒளி*
**க. செபரத்தினம்** (B.A.DIP.IN. ED)

அடிகளாரின் தலைமையில் அவருடைய வழிகாட்டலுக்கமைய காலமறிந்து, தேவையுணர்ந்து வெளியிடப்பட்ட மேற்படிநூலானது தமிழ் கூறும் நல்லுலகால் ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் பாரதியார் சுட்டிய குறை நீங்கிட வழி ஏற்பட்டது.

பல மொழிகளையும் படிப்பதனால் மனம் விரிவடைவதோடு பண்பட்ட வாழ்வும் சித்திக்குமென்பதனைத் தமது அனுபவமூலம் கண்டறிந்த அடிகளார் தமது மாணவர்களும் பல மொழிகளையும் கற்றிட வழிகாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலத்திலே அடிகளார் அதிபராகக் கடமை ஆற்றிய காலத்தில் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் சமஸ்கிருதம், இலத்தீன், சிங்களம் ஆகிய மொழிகளும் போதிக்கப்பட்டன. 1932 ஆம் ஆண்டிலேயே சிங்கள மொழிப் போதனை அங்கு ஆரம்பிக்கப்பட்டதென்பதை அறியும் போது, அடிகளாரின் உயரிய சிந்தனை நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறதல்லவா?

இவ்வாறே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசானாய்ப் பதவி வகித்த காலத்தில், தமிழ் வித்துவான் வகுப்பு மாணாக்கர்களுக்கு சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளையும், சிங்கள மாணாக்கர்களுக்கும். சிங்கள விரிவுரையாளர்களுக்கும் தமிழ் மொழியையும் கற்பித்திட ஒழுங்கு செய்து கொடுத்த அடிகளாரே போதனையையும் மேற் கொண்டாரென அறிகிறோம்.

அடிகளாரின் பரந்துபட்ட அறிவும் பல்வேறு துறைகளில் அவர்பெற்றிருந்த ஞானமும், அவரது நுண்மாண்நுழைபுலனும் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களாலும் இலங்கைப் பல்கலைக்கழகத்தாலும் முழுமையாகப் பயன் கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டின் சிதம்பரத்திலே பல்கலைக்கழகம் ஒன்றினை அமைப்பதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கென இந்திய அரசினால் நிறுவப்பட்ட ஆணைக் குழுவுக்கு, பல்கலைக்கழகத்தினர் தமது சார்பிலே தமது கருத்தினை வலியுறுத்திக் கூறத்தகுந்தவர் விபுலாநந்த அடிகளாரே எனக் கண்டு அவரை இலங்கையிலிருந்து வரவழைத்தனர். அடிகளார் தேவைப்பட்ட புள்ளிவிபரங்களுடனும் வேண்டிய ஆதாரங்களுடனும் அளித்த சாட்சியம் மிகுந்த மதிப்புடன் ஏற்கப்பட்டது. ஆணைக்குழுவினரின் விதந்துரைக்கமைய சிதம்பரத்திலே 1929 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதைப் பெருமிதத்துடன் குறிப்பிட வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகமானது அடிகளாரைத் தொடர்ந்து பயன்கொண்டிட விழைந்து நின்றது. மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே சாமிநாதையர், மதுரைத் தமிழ்சங்கத் துணைத் தலைவர் சீ. ஸ்ரீநிவாசஐயங்கார் ஆகியோருடன், அடிகளாரையும் கொண்ட ஓர் உபகுழு பல்கலைகழகத்துக்கான தமிழ் ஆராச்சித்துறை தொடர்பாக ஆராய்ந்திட நியமிக்கப்பட்டது. இக்குழு கொடுத்த அறிக்கையினை ஆதாரமாக கொண்டு, தமிழ் ஆராச்சி துறைக்கான விரிவான பாடத்திட்ட மொன்றினைத் தயாரிக்கும் பணியினை அடிகளாரே செய்ய வேண்டியதாயிற்று. அப்பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆராய்ச்சிதுறை உறுப்பினர்களுள் ஒருவராகவும், தமிழ் மொழிக்குரிய பரீட்சகர்களுள் ஒருவராகவும் அடிகளார் நியமிக்கப்பட்டமை அவருக்களிக்கப்பட்ட மதிப்பாகவே அமைகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து, அதன் வேந்தரான ராஜா. சேர். அண்ணாமலைச்செட்டியார் அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அடிகளாருக்கு வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்றுக் கொண்ட அடிகளார் தமிழ்த்துறை தலைவராகவும், பேராசானாகவும் நியமிக்கப்பட்டார். இதன் மூலம் பல்கலைக் கழகம் ஒன்றில் தமிழ்த்துறைக்கென நியமிக்கப்பட்ட முதற் பேராசான் என்னும் சிறப்பு அடிகளாரைச் சேர்வதாயிற்று. தமிழ்த்துறையுடன், கீழைத்தேச கல்வித்துறையையும் சேர்ந்த பீடத்துக்குரிய பீடாதிபதியாகவும் அடிகளார் நியமிக்கப்பட்டார். இதன் மூலம் பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ்த் துறைக்கென நியமிக்கப்பட்ட முதல் "போராசான்" என்னும் சிறப்பு அடிகளாரைச் சேர்வதாயிற்று தமிழ்த் துறையுடன் கீழைத்தேச கல்வியையும் சேர்ந்த பீடத்துக்குரிய பீடாதிபதியாகவும் அடிகளார் நியமிக்கப்பட்ட செயலானது அப்பெரியாரது உயர்ந்த அறிவினைப் பயன்படுத்திட, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செய்த உயர்ந்த செயலாகவே அமைகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகமும், அடிகளாரது அசாதாரண அறிவினைக் கல்வித்தறையில் ஈடுபட்டோர் முறையாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 1921 ஆம் ஆண்டிலே பல்கலைக்கல்லூரி ஒன்று இலங்கையில் நிறுவப்பட்டபோது, அதன் தமிழ்த்துறைத்தலைவர் பதவிக்கு அடிகளாரே ஏற்புடையவரெனக் கண்ட கல்லூரித்தலைவர் பேராசிரியர் மார்ஸ் (Prof. Marrs), பல்கலைக்கழக தந்தை என அழைக்கப்படுபவரான சேர்.பொன் அருணாசலம் ஆகியோர் அவரை அழைத்தபோதிலும் அக்காலகட்டத்தில் அடிகளார் துறவற நெறியை மேற்கொண்டு மயிலாப்பூர் இராமகிருஷ்ண சங்கமடத்திற் சேர்ந்திருந்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் இவ்வழைப்பு ஏற்கப்படவில்லை. பின்னர் பல்கலைக்கழக கல்லூரியானது பல்கலைக் கழகமாக 1942ல் தரம் உயர்ந்தப்பட்டதை தொடர்ந்து, அடிகளார் மீண்டும் அழைக்கப்பட்டார். இதனை ஏற்றுக் கொண்ட அடிகளார் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசனாகவும் நியமிக்கப்பட்டார். இதன் மூலம் இலங்கையின் முதற்தமிழ்ப் பேராசான் என்னும் சிறப்பும் அடிகளாரைச் சேர்வதாயிற்று. இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து அடிகளார் தமது இறுதி மூச்சு வரை, தாம் பெற்றுச்சுவைத்த கல்வி இன்பத்தை இலங்கை மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருந்த அரும் பணியை நாடே அறியும். அவரது மாணக்கர்களும், மாணாக்கர்ளின் மாணக்கர்களும் வாழையடி வாழையாக கல்வித்துறையில் இணைந்து உழைத்திடும் மரபு தொடர்ந்து செல்வதை இன்றும் காண்கிறோம்.


சாதி, குலம், இனம், மதம், இடம், மொழி முதலிய பேதங்களை எல்லாம் கடந்து "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் தமிழர்தம் உயரிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றி, கல்விப்பணி ஒன்றேயே வாழ்க்கைப்பணியாக வரிந்து கொண்ட வித்தகராம் விபுலாநந்த அடிகளார்..

**"கற்றாங்கு அறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்**
**பெற்றது கொண்டு மனம் திருத்திப் - பற்றுவதே**
**பற்றுவதே பற்றிப் பணியறநின்று ஒன்றுணர்ந்து**
**நிற்பாரே நீனெறிச் சென்றார்"**

- என்று நீதி நெறி விளக்கம் கூறும் வகையிலே வாழ்ந்து 1947 ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் பத்தொன்பதாம்நாள் (19. 07. 1947) தமது பூத உடலைத் துறந்து புகழுடம் பெய்தினார். அடிகளாரைப் பின்பற்றி, அவருடைய அடிச்சுவட்டிலே நாமும் அடிபதித்து நமது கல்வி அறிவை, ஏட்டுச்சுரக்காயாக அல்ல, வாழ்க்கைக்கு உதவும் கல்வியாக்கி, அதன் முழுப்பயனை நாமும் பெற்று, மற்றவர்களையும் பெறச்செய்வதே அம் மாபெரும் மேதைக்கு நாம் செய்பக்கூடிய உத்தம அஞ்லியாக அமையும்.

---

## சமாதான நீதிவான்



தாளங்குடா 2 ஐ பிறப்பிடமாகவும், செல்வாநகர் ஆரையம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட க.தங்கராசா அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தாளங்குடா ஆர்.சி.ரி.எம்.பாடசாலை, மட்டக்களப்பு ஆரையம்பதி சுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றி, தற்பொழுது மட்டக்களப்பு கிரான்குளம் சரவஸ்வதி வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றி வருகிறார். பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ மணங்கமழும் தில்லை மண்டூர்

செந்தமிழ்க் கடவுளாம் திருவேலன் உறைகின்ற காரணத்தால் பல்வகை வளங்களும் நிரம்பப்பெற்று எல்லோரது கவனத்தையும் தன்பால் ஈர்க்கின்ற சிறப்புடையது இந்த மண்டூர்க் கிராமம்.

நிலவளம், நீர்வளம், ஆகிய இயற்கை வளங்களோடு இயல்பாகவே கலையுணர்ச்சி கொண்ட மக்கட் செல்வங்களாலும் அவர் தம் கலைகளாலும் இங்கு உருவான அறிஞர் பரம்பரையாலும் கற்றறிந்தோர் போற்றும் தகுதி உடையதாய் விளங்கும் மண்டூர் மட்டக்களப்புக்குத் தெற்கே ஏறத்தாழ இருபது மைல் தொலைவில் அமைந்துள்ளது.

ஆதியில் மண்டு மரங்கள் நிறைந்திருந்த காரணத்தால் மண்டூர் என்றும் தில்லை மரவோரில் முருகப் பெருமானின் திருவேல் வந்து பதிந்திருந்து முருகன் கோயில் கொண்டதால் தில்லை மண்டூர் என்றும் பெயர் பெற்ற இப்பழம்பதி சின்னக் கதிர்காமம் என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகின்றது.

கிழக்கும், வடக்கும், தெற்கின் ஒருபகுதியும் மட்டக்களப்பு வாவியாற் சூழப்பட்டு மேற்கே மூங்கிலாறு, அப்பால் கிரட்டினை ஆறுகளால் வள மூட்டப்பட்டு வாளிப்பான ஓர் இளம் பெண்ணின் பூரித்த அழகோடு, என்றும் பொலிவோடு விளங்குகின்றது இக்கிராமம்.

தெற்கே பாலமுனை, தம்பலவத்தை ஆகிய பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இக்கிராமத்துக்கு மாறாத அழகையும் வளத்தையும் தருவது மட்டக்களப்பு வாவியும் அவ்வாவியிலே சங்கமிக்கும் எழிலார்ந்த ஆறுகளும், அவற்றின் அரவணைப்பிலே பொலிந்து கிடக்கின்ற பரந்த வயல் நிலங்களுமாகும்.

விவசாயத்தை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்ட உழவர் பெருமக்களே பெரும்பாலும் வாழ்ந்த மண்டூர் இன்று கல்வி வளர்ச்சியில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது. பல்வேறு அரச தொழில் புரியும் மக்களை இன்று தன்னகத்தே கொண்டுள்ளது மண்டூர். அரச தொழில் புரிந்தாலும் கூட விவசாயத்தை மறவாத பண்புடையவர்கள் இம்மக்கள்.

மண்டூருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்து பலரையும் தன்பால் ஈர்க்கின்ற பெருமை கொண்டது இங்கு அமைந்துள்ள முருகன் ஆலயம். வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் கொண்டதாக, பூஜை, வழிபாட்டு, உற்சவ முறைகளால் கதிர்காமத்தை ஒத்ததாக அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவாலயத்தின் வருடாந்த உற்சவம் வெகு சிறப்பாக நடக்கும். ஆவணி மாசத்தில் இருபது நாட்கள் திருவிழா நடைபெற்று ஆவணிப்பூரணை நாளான இருபத்தோராம் நாளில் மூங்கிலாறு மட்டக்களப்பு வாவியுடன் சங்கமிக்கும் இடத்தில் தீர்த்தம் ஆடுவதுடன் உற்சவம் நிறைவுபெறும். வருடாந்த உற்சவம் மட்டுமல்லாமல் கார்த்திகை தீபம், கந்தசஷ்டி விரதம் போன்றவையும் விசேடமாக இங்கு நடந்தேறும்.

இங்கு வாழும் சிறார்களின் கல்வி வளர்சிக்கு உறுதுணையாக உயர் கல்வி வசதியுடன் கூடிய மகா வித்தியாலயம் ஒன்றும் இ. கி. மிஷன் வித்தியாலயங்கள் இரண்டும் பாலமுனை, தம்பலவத்தை ஆகிய பிரிவுகளில் இரண்டு வித்தியாலயங்களுமாக மொத்தம் ஐந்து கல்விக்கூடங்கள் அமைந்துள்ளன.

மண்டூர் கிராம மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றும் இக்கல்விக்கூடங்களில் காலத்தால் முந்தியவை இங்கு அமைந்துள்ள இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயங்கள் இரண்டுமாகும். இங்கு தமது ஆரம்பக்கல்வியைக் கற்றுக் கொண்ட பலர், மண்டூர் அன்னைக்குப் புகழ்சேர்க்கும் அறிஞர்களாய், கலைஞர்களாய், கல்வி மான்களாய் உருவாகி உள்ளனர். அந்த வரிசையில் ஈழத்தமிழ் உலகம் போற்றும் பெருமை கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பு தமிழகம் தந்த வித்துவான் வீ. சி. கந்தையா, சிறந்த அரசியல் வாதியான சி. மூ. இராசமாணிக்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியராய் கல்வித்துறையில் பெயர் பெற்று விளங்கிய ப. சந்திரசேகரம், மண்டூர்க் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை, கல்வியியலாளர் கோ. கோணேசபிள்ளை என்று இன்னும் பலரைக் குறிப்பிடலாம்.

இன்றும் கூட இளம் தலைமுறையினரில் காத்திரமான பல கவிஞர்களை கொண்டிலங்கும் மண்டூரில் இத்தகைய கவிவளம் பெருகுவதற்கு அதன் ஆர்ப்பாட்டமும், ஆடம்பரமும் இல்லாத அமைதியும், இயற்கை அழகும், கவனத்தை வேறெதிலும் திசை திருப்பாத வாழ்க்கை முறையும் காரணமாயிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இத்தகைய கவிவளத்தையே "மண்டூர்க் கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை "மண்டூர்க் கீரையடி மண்ணும் கவிபாடும்" என்று குறிப்பிட்டார்.

மண்டூர் மண் கீரைக்கும் பேர்போனது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இங்கு விளையும் கீரையை இங்கு ஊற்றெடுக்கும் நீரிலேயே சமைத்துச் சாப்பிட வேண்டும். அப்படி சமைக்கும் கீரைக்கறி அலாபதியான சுவையுடையது என ஆவணித்தீர்த்தமாட வரும் பக்தர்கள் கட்டுக்கட்டாக இங்கிருந்து கீரை சுமப்பதைக்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரைக்கு மட்டுமல்லாது பலாப்பழத்துக்கும் மண்டூர் பிரசித்தி பெற்றது. ஊர் நிறைந்த பலாக்கனிகளின் வாசம் ஆடி, ஆவணி மாசத்திலிருந்து கமகமக்கத் தொடங்கும். மண்டூருக்கு இக்காலங்களில் வருவோர் ஒரு பலாப்பழமாவது கொண்டு செல்லாமல் செல்வதில்லை. இந்துக்களே பெரும்பாலும் வாழ்கின்ற மண்டூர்க்கிராமத்தின் மத்தியில் மெதடிஸ்த தேவாலயம் ஒன்றும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் இரண்டொரு கிறிஸ்த்தவக் குடும்பங்கள் வாழ்ந்து வந்த மண்டூரில் இன்று அச்சமயத்தவர் தொகையும் சற்று அதிகரித்துள்ளது.

இயற்கை வளங்கள் பலவற்றையும் கொண்ட மண்டூர்க் கிராம மக்களின் தீர்க்கப்படாத குறைகள் பல இருப்பினும் முக்கியமான குறையாக உள்ளது ஒழுங்கான போக்குவரத்து வசதியின்மையாகும். சுற்றிவரநீரால் சூழப்பட்டுள்ள இக்கிராம மக்கள் வெள்ளகாலங்களில் ஆபத்தான பயணங்களையே மேற்கொள்ள வேண்டியிருந்தது. மண்டூர் குறுமன்வெளித்துறையூடாக இயந்திரப்படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஓரளவு அச்சமற்ற பயணங்களை மேற்கொள்ள முடிந்தாலும், சீரான வீதிகளோ, ஒழுங்கான பஸ் சேவைகளோ இல்லாததால் பெரும் பாலும் சொந்த வாகனங்களை நம்பியே இங்குள்ள மக்கள் வாழவேண்டியுள்ளது.

வைத்திய வசதிகளைப் பொறுத்த வரையிலும் பின் தள்ளப்பட்ட கிராமமாகவே மண்டூர்க்கிராமம் காணப்பட்டது. நீண்ட காலமாக சிறிய மருந்தகம் ஒன்று மட்டுமே அமைந்திருந்த மண்டூர்க்கிராமத்தில் அன்மைக்காலமாக விடுதி வசதியுடன் கூடிய ஒரு வைத்தியசாலையும், அம்பியுலன்ஸ் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது சற்று ஆறுதலான விடயமாயுள்ளது.

**மண்டூர் அசோகா**

பாரம்பரியங்களையும் பழம் மரபுகளையும் இன்னமும் கைவிடாத மண்டூர் மக்களின் வாழ்க்கை முறையும் ஒன்றுக்குள் ஒன்றாக வாழும் குடும்ப அமைப்பும், ஆன்மீக ஈடுபாடும், விருந்தோம்பும் பண்பும், ஒருவரு க்கு ஒன்றென்றால் ஊரே கூடி நிற்கும் உறவுப் பிணைப்பும் மாறாமல் உள்ளவரை மண்டூரின் பெருமையும் சிறப்பும் உயிர்ப்புடன் வாழும்.

எழுத்தாளர்கள் தரமான கட்டுரைகள், ஊர் தொடர்பான விபரங்கள், சிறுகதை, விளையாட்டு கழகங்கள் தொடர்பான தகவல்கள், பாடசாலை தொடர்பான விபரங்கள் போன்றவற்றை உங்கள் அபிமான தென்றலுக்கு அனுப்பி வைக்கலாம். – ஆசிரியர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இருப்பு

கவித் தென்றல்

இராவ ணன்எனும் இன்றமிழ் வேந்தன்
இந்த நாட்டை இகலொடே ஆண்ட
இராம காதையை நாங்களும் கற்றோம்
இந்தச் செய்தியால் ஈழவர் என்போர்
நிராத ரவினால் இரவோ டிரவாய்
நீண்ட தோணியில் வந்தவர் அல்லர்.
தராத ரத்தொட தொல்புங் காத்த
தமிழர் ஆதிக் குடியெனக் கண்டோம்.

அந்த ஆதிக் குடியின் மரபில்
ஆண்டி ருந்தவர் எங்கள் குலத்தார்
வந்த ஆரிய மாயைப் பரம்பல்
மாள வைத்திட வில்லை யெனினும்
தந்த பேரோ நாகர், "இயக்கர்"
தகுதி யற்ற அமானுடர் என்ற
விந்தை யான புனைகதை யாலே
விஷம மான சரித்திரம் செய்தார்.

கயவ னான விஜயனோ நாடு
கடத்தப் பட்ட பயங்கர வாதி
அபய மென்றிங்கு வந்து பணிந்தான்
ஆட்சி செய்த குவேனி அரசி
புயப லத்தொடு செங்கோல் செலுத்தும்
பொற்பு மிக்க தமிழ்க்குல நங்கை
கயலின் நீள்விழிக் கன்னிகை, அன்னாள்
காதல் சேற்றில் விழுந்தத னாலே..

நஞ்சு வைத்து அவள்குல மெல்லாம்
நாச மாக்கி அவளை விரட்டி
பஞ்ச மாபெரும் பாதகம் செய்தான்
பாவி, பாண்டியன் பெண்ணை மணந்து
வஞ்ச கன்முடி சூடி இலங்கை
மன்ன னான வரன்முறை யி.'.தாம்
கொஞ்ச மும்மனம் ஈர மிலாதான்
கூட்டி வந்திட்ட தோழர்கட் கெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டி நாட்டிலே பெண்களைக் கொண்டான்
பரம்ப லானது சிங்களல்ல வம்சம்
ஈண்டி ருப்பவர் ஆரியர் தூயர் !
என்ன பம்மாத்து கிற்லரைப் போல
பூண்டி னோடே இனஅழிப் பொன்று !
பூர ணத்துவம் காணவா யுத்தம?
தூண்டு கின்றவர் தேரர்கள் அன்றோ!
சொர்க்க லோகம் அவர்க்கெனல் திண்ணம!

அகிம்சைப் போரில் தோல்வியைக் கண்டு
ஆயு தத்தினைத் தூக்கிய வீரர்
குவிந்து ஒன்றாய்ச் செயற்படல் அன்றி
கூறு பட்டு மாற்றலர் கைவில்
நிமிர்ந்த அம்புக ளாய் எமை நாமே
நீச மாக்குதல் நீதியென் றோர்ந்தா
துவம்சம் செய்து சொந்தமண் வீழத்
துடித்து நிற்கிறோம் என்ன கொடுமை!

அன்றோர் விபிஷணன், அடுத்துஎட் டப்பன்
அதன்பின் னாகக் காக்கை வன்னியன்
என்ற வரிசையில் வரலா றுள்ளது.
இன்னும் இதனையே ஏன் நாம் தொடர்கிறோம்
நன்றி சொல்லவா எமையழிப் போர்க்கு?
நம்மி னத்தையே நாசம் செய்கின்றோம்!
ஒன்று ணருதல் இன்று கட் டாயம்
ஒன்றை யாட்சியில் இன்றுதான் சொர்க்கம்!


சொந்த மண்ணிலே சிற்றின மாய்ப்பு
சுத்த மான தனிஜன நாயகம்!
உடந்து கணைகளால் உயிர்குடித் திடுதல்
உயர்வு மிக்க பெரும்ஜன நாயகம்!
விந்தை மிக்க விமானக் குண்டுகள்
வீசிக் கொல்லுதல் மகாஜன நாயகம்!
பந்த மோடு தமிழினம் போகும்
பஸ் அழிப் பும்ஜன நாயகம் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை தொகையிலாத் தமிழர்கள் கைதும்
வதைப்பும் கூட நல்ஜன நாயகம்
செகத்தில் எங்குமே இந்நிலை யில்லை
சேர்ந் தொருங்கு குவிந்துள தென்றால்
நகைப்ப வர் எவர்? நாடுக ளெல்லாம்
நன்கு போற்றி வழிபடல் நன்றே!
பகைப்பு லம்இதில் பேரினம் மட்டும்
பௌத்த ராயிங்கு வாழலாம் கண்டீர்!

தமிழர் தாயகம் பேரின வாதத்
தால்வி ழுங்கிடப் பட்டு முடிந்தும்
அமிழ்த முண்ண அவரடிக் கீழே
அடிமை யாகியே ஆணைகள் ஏற்று
நமதி னத்தை நசுக்கிப் பிழிந்து !
நாச மாக்கி நகைத்திருக் கின்றோம்
எம திருப்புக் கினியிட மில்லை
இந்த உண்மையை ஏன் உண ரீரோ?

- திமிலைத்துமிலன் -



ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த நாவலடி மற்றும் ஆரையம்பதி பிரதேச வீடுகளை புனர்நிர்மாணம் செய்து மட்டக்களப்பு - கல்முனை கரித்தாஸ் எகெட் நிறுவன பணிப்பாளர் வணபிதா சிறிதரன் சில்வெஸ்டர் திறந்து வைப்பதையும். நினைவுப் படிமத்தை அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரதிநிதி பேராயர் மரியோ சொனாரி ஆகியோருடன் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படம் + தகவல் : மைக்கல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகில் ஆங்கிலக் கல்வியின் அவசியம்

உலகில் நவீன வளர்ச்சியும் நாகரீகப் புதுமைகளும் அதிகரிக்கின்ற இக்காலத்திலே மொழிகளில் சர்வதேச மொழியாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொழி ஆங்கில மொழியாகும்.

நவீன உலகில் தொட்டில் பிள்ளை முதல் வயது வந்தோர் வரை கணனி என்னும் கல்விக்குள்ளே தம்மை மூழ்கடித்து வரும் இக் காலகட்டத்திலே ஆங்கிலக்கல்வியானது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

செவ்வாய்க்கிரத்தில் வாழ்க்கை வாழ முயற்சித்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பல இயந்திர சாதானங்களுடனும், ஆய்வுகளுடனும் பின்னிப்பினைந்து வையகத்திற்குள்ளே சாதனையின் சுவர்க்கங்கள் போல இன்றைய காலகட்டத்தில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு தம் சாதனைகளை வெளிக்காட்டி வரும் வேளைதனில் ஆங்கிலக் கல்வியானது பிட்டுக்குத் தேங்காய்ப்பூ எவ்வாறு முக்கியமோ அவ்வாறே அவசியமான தொன்றாக காணப்படுகின்றது.

இன்று ஆங்கிலக் கல்வியானது பாடசாலை மட்டங்களில் தரம் ஒன்றிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நம் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் தடம் பதித்துள்ளது என்பதை அறிய முடிகிறது. அத்தோடு பாடசாலையில் ஆங்கிலக் கல்வி கட்டாய பாடமாக புகுத்தப்பட்டுள்ளதோடு, பல்கலைக்கழக நுழைவுக்கும் ஆங்கிலக் கல்வி முக்கியமாக்கப்பட்டுள்ளது.

இன்றைய நவீன யுகத்தில் நாட்டுக்குள்ளே சந்தை மயமாக்கப்பட்டது போல் தகவல் தொழில்நுட்பம், மின்னஞ்சல். வையக விரிவு வலை எனப்பல பல துறைகள் தலை தூக்கி உள்ளன.

இவற்றின் மூலம் எவ்வளவோ தூரத்தில் நடக்கும் புதினங்களை வீட்டுக்குள்ளேஇருந்து அறியக் கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளன.

இந் நிலையில் இவற்றை புரிந்து கொள்வதற்கு ஆங்கிலக் கல்வி எவ்வளவு அவசியமானது என்பதை நாம் அனுபவ வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.


திருமதி. கவிதா கிருபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"தென்றல்" சஞ்சிகை அனுசரணையுடன் மட்டுநகர் முன்னணி இசைக்குழுவான "கீதாரகாஸ்" இளையவர் இசைக்குழு வழங்கிய இன்னிசை வார்ப்புகள் இசை நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் து. சத்தியானந்தி, மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீ. யோகேஸ்வரன், வணபிதா ஜோசப் மேரி அடிகளார், பாவலர் சாந்தி முஹியித்தீன் மட்டக்களப்பு அரசினர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் க. மகாலிங்கசிவம், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் பேரவைத்தலைவர் காசுபதி. நடராசா மற்றும் தென்றல் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த டாக்டர் எம். கந்தசாமி ஆகியோர் குத்து விளக்கேற்றுகின்றனர்.



இசைக்குழு பாடகர்கள் கானம் இசைக்கின்றனர்.
(படம் + தகவல்
வீ. கே. ரவீந்திரன்)

அதிதிகள், பொதுமக்கள் ஆகியோர் இதுவரை உயிர்நீத்த பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக அஞ்சலி செலுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எமது பிரதேச மக்களின் எழுத்தாற்றலுக்கு தென்றல் வழி காட்டியாக அமையட்டும்!"

## மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

(நமது சிறப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல சஞ்சிகைகள் வெளிவந்து மறைந்து விட்ட நிலையிலும், "தென்றல்" மக்களின் எழுத்தாற்றலுக்கு வழிகாட்டியாக அமைவது பாராட்டுக்குரியது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் து. சத்தியானந்தி தெரிவித்தார்.

"தென்றல்" சஞ்சிகை அனுசரணையுடன் மட்டுநகரின் முன்னணி இசைக்குழுவான "கீதாரகாஸ்" இளையவர் இசைக்குழு வழங்கிய "இன்னிசை வார்ப்புகள்" இசை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வைபவம் மட்டக்களப்பு தேவநா யகம் கலையரங்கில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அங்கு தொடர்ந்து உரையா ற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது

"தென்றல்" சஞ்சிகை வெளியிடுவதோடு மட்டும் நின்றுவிடாது இவ்வாறான இசைநிகழ்வுகளையும் நடாத்தி மக்களின் கலைப்பசிக்கு ஆறுதலூட்டுவது போற்றத்தக்கது என்றார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் க. மகாலிங்கசிவம், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீ. யோகேஸ்வரன், வணபிதா ஜோசப் மேரி அடிகளார், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் பேரவைச் செயலாளர் பாவலர் சாந்தி முஹியித்தீன், தலைவர் காசுபதி. நடராசா, "தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் பீட உறுப்பினர் எம். கந்தசாமி, சிரேஸ்ட ஊடகவியலாளர் வீ. கே. ரவீந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தித்துளிகள்

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல்

*(நமது சிறப்பு நிருபர்)*

எகெட் கரித்தாஸ் நிறுவன கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் அனைத்து முன்பள்ளி ஆசிரியைகளுக்கான வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வொன்று அண்மையில் கத்தோலிக்க கழக மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வு எகெட் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்பணி சிறிதரன் சில்வெஸ்டர் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் எகெட் கல்விப் பிரிவு திட்ட உத்தியோகஸ்தர் ஜீலியன் வாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ் ஒன்று கூடலில் கதிரவெளி தொடக்கம் சொறிக் கல்முனை வரையிலான 44 முன்பள்ளி ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

---

### இங்கினியாகலையில் முன்பள்ளி திறப்பு விழா

*(நமது சிறப்பு நிருபர்)*

மட்டக்களப்பு - அம்பாறை எகெட் கரித்தால் நிறுவன கல்விப் பிரிவினால் இங்கினியாகலையில் மீள் நிர்மாணிக்கப்பட்ட பாத்திமா முன்பள்ளி கட்டிடம் அன்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இம்முன்பள்ளிக்குரிய தளபாடங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் போன்றவை எகெட் நிறுவன கல்விப் பிரிவால் கையளிக்கப் பட்டதாக மேற்படி பிரிவின் திட்ட உத்தியோகஸ்தர் ஜீலியன் வாஸ் தெரிவித்தார்.

---

### மட்டக்களப்பு வெளிச்சவீடு புனரமைப்பு !

*(நமது சிறப்பு நிருபர்)*

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணமாக சேதமடைந்த மட்டக்களப்பு வெளிச்ச வீடு அமெரிக்க மக்களின் 2 1/2 கோடி ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக புனரமைப்பு செய்யப்பட்ட வெளிச்ச வீட்டினை அமெரிக்க தூதுவர் றொபர் பிளேக் திறந்து வைத்தார்.


இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் மா. உதயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினித்தென

ஆயிரம் அரிவாளால் செய்ய முடியாததை ஆறு அறிவாளி செய்ய முடியும். இது தான் வேல் படத்தின் கதை.

சூர்யா இரண்டு வேடத்தில் நடித்திருக்கிறார். இருவரும் சரண்யா- சரண்ராஜ் தம்பதியினரின் மகன்களாக நடித்திருக்கின்றனர். இவர்களில் வேல் மூன்று வயதில் காணாமல் போய் ஒரு கிராமத்தில் உள்ள பெரிய வீட்டில் வளர்கிறார். அவர் அரிவாள் கையுடன் எதிரிகளை வீழ்த்துவதில் கில்லாடியாக இருக்கிறார். எதிரி ஒரு தப்பு செய்தால் அதற்கு இவர் பத்து செய்வார்.



இன்னொரு சூர்யா டிடெக்டிவ் நிறுவனத்தில் முக்கியமானவர். குடும்பத்தினருடன் நேரத்தை செலவழிக்காமல் சதா வேலையில் பிஸியாக இருப்பவர். அவருக்கு அண்ணன் வேல் இருக்கும் இடம் தெரிய வர அவரைக் காணப் புறப்படுகிறார்.

தம்பியைப் பார்த்ததும் பாசம் காட்டும் அண்ணன் வேல். அந்தப் பெரிய குடும்பத்தின் பாசத்தை மறந்து வர மறுக்கிறார். அத்தோடு எதிரியிடமிருந்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பை சொல்லி தட்டிக் கழிக்கிறார். ஆனால் தம்பி வாசு அண்ணனை அம்மாவைப் பார்க்க அனுப்பி வைத்து தான்தான் வேல் என அங்குள்ளவர்களை நம்ப வைத்து அண்ணனின் எதிரிகளை தனது அறிவால் பழி வாங்குகிறார்.


இது எதிரிக்கு கடைசியில் தெரிய வர, அடுத்து என்ன நடக்கிறது என்பது பரபரப்பான க்ளைமாக்ஸ்.

சூர்யா வேல், வாசு என இரண்டு கதாபாத்திரத்திற்கும் வேற்றுமை காட்டி நடித்திருக்கிறார். வாசு டிடெக்டிவ் ஏஜென்சி நடத்தியவாறு அஸின் அழகை உள்வாங்குகிற காட்சிகள் சூப்பர். இதே போல அவரை போதை பொருளுக்கு அடிமையானவர் என்று அவரிடமே எழுதி கொடுத்து விட்டு காதலை மனதில் வைத்து ஏங்குவதும் சூப்பர். கிராமத்து வீட்டில் தங்கிப் பெரியவர்கள் முதல் சிறுவர்கள்வரை அனைவர் மனதிலும் இடம் பிடிப்பது ரசிக்க முடிகிறது. வில்லனை தந்திரத்தால் பழி வாங்குகிற காட்சி செம ஜாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்

வேல் சூர்யா பாய்ச்சல், பாய்ந்து சீறும் அவர், கோர்ட் வளாகத்தில் தம்பியையும் லாட்ஜில் பெற்றோரையும் காண்பது நல்ல செண்டிமெண்ட். பிறகு பெற்றோருடன் தங்கி அன்பு காட்டும்போது நெகிழ வைக்கிறார்.



ஆடிதடியில் சூர்யா அசத்தியிருக்கும் படம் இது.

டிடெக்டிவ் ஏஜென்சிக்கு திடீர் என வந்து சூர்யாவின் மனதை ஆட்டிவிட்டுப் போற இடத்தில் அஸின் அசத்தலாக நடித்திருக்கிறார்.

விபூதி மாத்திரையைப் பார்த்து போதைவஸ்த்துக்கு அடிமையானவர் என்று புரிந்து கொண்டு பதறுகிற காட்சியில் செமலொள்ளு அவர் வசனம் பேசும் தொனியே அழகு.

வடிவேலு கிருஷ்ணமூர்த்தியின் டீ கடைக்குச் சென்று உட்கார. அங்கு காக்கை எச்சம்விட அதனால் நடக்கும் அடிதடியில் கடைக்கே நெருப்பு வைக்கும் காமெடி கலகல ரகம்.

அதைபோல கிருஷ்ணமூர்த்தியைத் திட்டி அல்வா வாசுவின் செல்போனுக்கு வாக்குமூலம் கொடுத்து மாட்டிக் கொள்வதும் ரசிக்க முடிகிறது.

மிரட்டும் வில்லனாக வந்து ஆர்பரிக்கிறார் கலாபவன் மணி. அன்பான அம்மாவாக சரண்யா, பாசமான பாட்டியாக லட்சுமி, அடடே என வியக்க வைக்கும் பாத்திரத்தில் ராஜ்கபூர். ஓ. ஏ. கே சுந்தர் எனப் பலர் நடித்துள்ளனர்.

யுவன்சங்கர் ராஜா இசையில் ந. முத்துகுமார் எழுதி சங்கர் மகாதேவன், ஸ்ரீலேகா பார்த்தசாரதி பாடிய உன்னப் போல ஆம்பிள்ளையை.... பாடல் ரசிக்க முடிகிறது அதற்காக வண்ண வண்ணமாக கதிர் அமைத்த கலையமைப்பும், தினேஷின் நடனமும் அசத்தல், சண்டை காட்சிகளை படமாக்கியிருக்கும் ராக்கி ராஜேஷ் நிறைய பாடுபட்டிருக்கிறார்.

இரட்டை வேட கதையை பரபரப்போடு, படு வேகத்தோடு படமாக்கியிருக்கிறார் டைரக்டர் ஹரி. படத்தில் புதிதாக எதுவும் இல்லையென்றாலும், படம் போற வேகத்தில் நேரம் போவது தெரியவில்லை. ஆகஷ்ன் சென்டிமென்ட் பிரியர்களுக்கு சரியான விருந்து வேல்.

— தயாரிப்பு : **கே. சுதன்** —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளந்தென்றல்



தயாரிப்பு

கே. சுதன்

### அறிஞர் சிந்தனை

தன்னம்பிக்கையின் குறைவே அதிருப்தி அது நெஞ்சுறுதியின் குறைபாடு.

- எமர்சன் -

## சேர்ந்து வாழ்வோம்

சின்னத் தம்பி
பார்க்கிறான்
சேர்ந்து ஆட
வருகிறான்
அன்பால் அவனை
ஆளுவோம்
அணைத்து ஒன்றாய்
வாழுவோம்

உயிர்கள் அனைத்தும்
தோழர்கள்
உறவு பூண்டு
வாழுவோம்
பயின்ற கல்விப்
பயனதால்
பயன் அடைந்து
மகிழுவோம்

இந்து, இஸ்லாம்
பௌத்தமும்
இனிய கிறிஸ்து
வேதமும்
சொந்தம் மனித
உயிருக்கே
சண்டை இதிலேன்
நமக்குள்ளே

அரிதாம் மனிதப்
பிறவியாம்
அன்பே இன்ப
ஊற்றதாம்
பெரியோர் சொல்லைக்
கேட்டுமே
பெருமை பெற்று
வாழுவோம்

### இலங்கை தொடர்பான விடயங்கள்

❖ இலங்கை எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது?

ஆசியா கண்டத்தில்

❖ இலங்கையில் பேசப்படும் மொழிகள் எவை?

தமிழ்
சிங்களம்
ஆங்கிலம்

❖ இலங்கையில் மிகப்பெரிய சரணாலயங்கள் எவை?

யால, வில்பத்து

❖ இலங்கையில் மிகப் பெரிய பூங்கா எது?

பேராதனைப் பூங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம திருப்தி

- சிறுகதை -

தனக்கு இட்ட கட்டளையினை செவ்வனே செய்கின்ற வேலையாளினைப் போன்று படைத்தவன் தனக்கு இட்ட கட்டளையினை காலைச் சூரியன் செய்யத் தொடங்கினான். தனது உஷ்ணக் கதிர்களைப் பூமியின்மேல் மெதுமெதுவாகப் பாய்ச்ச ஆரம்பித்தான். தான் மணம் முடித்து முதன்முதலாக வாங்கிய அந்த சுவர்மணிக்கூடு பென்சனியர் சுந்தரராஜன் வீட்டில் காலை 9.30 ஐக் காட்டியது.

இருந்த இட்லியைப் பிய்த்து சட்னியில் தொட்டுத் தொட்டு அவசரஅசரமாக வாயிலிட்டு மென்று விழுங்கினார் சுந்தரராஜன். காலத்தையும் நேரத்தையும் காட்டிக்கொண்டிருந்த அந்த வட்டவடிவான சுவர் மணிக்கூட்டை அவசரமாக நிமிர்ந்து பார்த்த சுந்தரராஜன் "சாந்தா சாப்பாடு கொண்டு வச்சனி தண்ணி கொண்டு வச்சயா? இட்லி தொண்டையை அடைக்குது தண்ணியை கெதியாக் கொண்டா" சமையற்கட்டில் தட்டு முட்டுச் சாமான்களுடன் சண்டைபிடித்துக் கொண்டு இருக்கும் மனைவி சாந்தாவிடம் குரல் கொடுத்தார். "ம்.....தொடங்கித்து மனுசன்" என்று வாய்க்குள் முணுமுணுத்தாலும் அவர் சொல்வது சரிதானே" என்று மனம் எண்ணிக்கொண்டது.

"இந்தா கொண்டு வாறன்" என்றவள் செம்பு நிறைய தண்ணீரை எடுத்துக்கொண்டு கணவரை நோக்கி விரைந்தாள். மனைவி கொடுத்த நீரைப்பருகியவர் "உண்மையில நாம தண்ணீ எடுத்துக் குடிக்கிறத்தவிட மனைவி எடுத்துத் தார தண்ணீர் ருசிதான்" என்று எண்ணியவர் மனைவி கொடுத்த துண்டால் வாயையும் கையையும் துடைத்துக் கொண்டார். "என்னங்க இட்லியும் சாம்பாரும் நல்லா இருந்திச்சா என்று கேட்க மனைவியைச் சீண்டிப் பார்ப்பதற்காக "என்ன செய்யிற நல்லா இருந்திருச்சோ கூடாமஇருந்திச்சோ 35 வருஷமா நீ சமைத்த சாப்பாட்டைத்தானே திண்டுகொண்டிருக்கன்" என்றார். சாந்தா முறுக்கேறினாள் "அப்படியென்டா எண்ட சாப்பாடு நல்லா இல்லையா? மனைவியைச் சாந்தப்படுத்த எண்ணியவர் உண்ட சாப்பாட்டைச் சாப்பிட்டுத்தானே 35 வருஷங்களாக ஆரோக்கியமாக இருக்கன்" என்று மனைவியின் முகத்தைப் பார்த்தார். மனைவியின் முகத்தில் திருப்தியின் அறிகுறி தெரிய மணிக்கூட்டின் முகத்தைப்பார்த்தவர் அது 10.30 ஐக் காட்ட கொதிநீர் ஊற்றுப்பட்டவர் போன்று உசாராகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்நேரம் அங்க எல்லோரும் போளின்ல நிப்பாங்க நேரத்தோட போகோணும் எண்டு நினைச்சனான். நடந்துபோய் எத்தின மனிக்குத்தான் சேர்ரதோ" என்று அலுத்துக் கொண்டவர் வேகமாகச் சென்று கண்ணாடியில் தன்னை ஒருதரம் சரிசெய்து கொண்டார் "எப்படி என்னப்பாரு இந்த 62 வயசிலையும். நான் எவ்வளவு இளமையாக இருக்கன் எண்டு" என்று சொல்ல "நினைப்புத்தான்" என்றாள் சாந்தா.

விரைவாக வெளியில் சென்று தன் பாதணிக்குள் தனது பாதங்களைச் சொருகித் கொண்டார். அவரை நிமிந்து பார்த்தாள் சாந்தா " அழகான அரைக்கை நீலச் சேட்டுடனும். நீலக் கரையுடைய வேட்டி யுடனும். மூக்குக் கண்ணாடியு டனும் மனுசன் வடிவாத்தான் இருக்கார் என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டவள் வெளி யில் போய் நின்றாள். அவர் வெளியில் செல்லும் பொழுது எப்பொழுதும் குங்குமம் இட்ட சாந்தாவின் முகத்தில் முளித்து விட்டே வெளியில் செல்வார். வெளியில் வந்த சுந்தரராஜனின் முகத்தில் வெயில் சுட "இதெ ன்ன வெயிலா இருக்கு" என்று கூற "கொஞ்சம் பொறுங்க குடையை எடுத்துத் தாறன்" என்றவள், ஓடிச்சென்று குடையை எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தாள். தூசியைத் தட்டிக் குடையை விரித்ததும் அதற்குள் இருந்த கரப்பான் பூச்சி ஒன்று அவரின் தோளில் விழுந்து தட்டுத் தடுமாறி கீழே விழுந்து ஓட்டம் பிடித்தது.



"குடையத் தரக்குள்ள பார்த்துத் தரக்கூடாதா" என்று மனைவியைக் கடிந்து கொள்ள கணவரை நன்கு அறிந்திருந்த சாந்தா "மனுசன் நேரம்போனா கடுதண்ணி மாதிரி இருப்பார்" என்று நினைத்துக் கொண்டு "எனக்கு என்ன தெரியும் கரப்பத்தான் பூச்சி என்னட்ட கேட்டுத்தா உள்ளுக்குள்ள போனது" என்று நகைச்சுவையுடன் கூற சுந்தரராஜன் தன்னையும் அறியாமல் சிரித்துவிட்டார். "நேரம் பொயித்து நடந்துபோகாம பஸ்ல போங்க" என்றுவிட்டு "இல்ல இல்ல நடந்தே போங்க. பஸ்ல குண்டுகிண்டு வெடிச்சாலும்" என்று சொல்ல "அடிபோடி நம்மட சாவை எங்கே எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு கடவுள் நினைச்ச மாதிரித்தான் நடக்கும்" என்றவர் ஓட்டமும் நடையுமாகச் செல்கின்றார். தன் கணவரை அனுப்பிவிட்டு தன் வேலைகளில் மூழ்கிப் போகிறாள் சாந்தா. அதேசமயம் தன்கணவரின் கடந்தகால வாழ்க்கையில் மனம் மூழ்கிப் போகிறது.

வறுமைக் குடும்பத்தில் பிறந்த சுந்தரராஜன் தன்னுடைய தயாரின் ஊக்கத்தாலும், தன்னுடைய முயற்சியாலும் சீதனம் வாங்காமல் ஒரு நல்ல மனைவியைக் கைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் இருந்தது. தான் எண்ணியது போன்று சாந்தாவைக் கைப்பிடித்தார். பாடசாலை சென்று விட்டு பின்னேரம் 7 மணி வரைக்கும் ஆங்கில ரியூசன் கொடுத்து மிகக்கடுமையாக உழைத்து தமக்கென்று ஒரு வீட்டைக்கட்டினார்கள் அவர்கள் இருவருக்கும் இரு அழகான பெண் பிள்ளைகள் பிறந்தனர். இருவரையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து தமது மனதில் இருந்த இலட்சியங்களுக்கு ஏற்ப ஒரு பெண்ணை வைத்தியராகவும், இரண்டாவது பெண்ணை சட்டத்தரணியாகவும் உருவாக்கினார்கள்.

இருவரையும் நல்ல இடத்தில் மணம் முடித்துக் கொடுத்து இன்று அந்த இரு பெண்பிள்ளைகளும் மிகவும் நல்ல நிலையில் சமூகத்தில் இருக்கிறார்கள். தங்களை நல்ல நிலைக்குக் கொண்டுவந்த பெற்றோர்களை அவர்கள் மறந்ததே கிடையாது. வேலைப் பழுவின் மத்தியிலும்கூட நேரங்கிடைக்கும் பொழுதெல்லாம் தம் பெற்றோரிடம் வருவார்கள். வரும் பொழுதெல்லாம் செல்லமாக ஏசுவார்கள்.

"அப்பா! அம்மா! இந்த வயசிலும் நீங்கள் இருவரும் தனியாக இருக்கவேண்டுமா? எங்களுடன் வந்து இருக்கலாம்தானே? உங்களுக்கு விருப்பம் என்றால் அப்பா ஒராளுடனும், அம்மா ஒராளுடனும் இருக்கலாம்தானே" என்று கூறுவார்கள். "புள்ள உனக்குத் தெரியாததா ? தன் உழைப்பில் முதன்முதலாக கட்டிய இந்த வீட்டை விட்டுத்து அவர் கடைசிவரைக்கும் வரமாட்டார். நான் அவர விட்டுத்து ஒரு நாளும் தனிய வரமாட்டான். நாங்க சாகும் வரைக்கும் இந்த வீட்டில்தான் இருப்பம்". என்று அம்மா பதிலளிப்பார். சாந்தாவின் எண்ணம் நீண்டு கொண்டு போக வெளியில் "அம்மா அம்மா" என்று அழைக்கும் சத்தம் கேட்டது.

தன் நினைவுகளில் இருந்து கலைத்தவளாக நெற்றியில் வளியும் வியர்வையைத் துடைத்துச் கொண்டு குந்தியிருந்தவள் வேலையை நிறுத்தி விட்டு நிமிர்ந்தாள். தன் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் ஓடி ஓடி உழைத்த பயன் இடுப்பும், முள்ளந்தண்டும் நிரந்தரமாக நோயைப் பெற்று விட்டன.

"அம்மா" என்று முனகியவாறு எழுந்து வெளியில் சென்றாள் வெளியில் தனது மூத்த மகளும் 3 வயது நிரம்பிய மகனும், மகளின் கணவரும் நின்றிருந்தனர். "ஓடிவாடா" செல்லம் என்று தன்பேரனை அள்ளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவள் வாங்க மகன் என்று தன் மருமகனை அன்பாக அழைத்தாள். "அம்மா நான் வரவேணாமா" என்று அம்மாவைச் செல்லமாகக் கடித்தாள். தன்மகளின் கரங்களைப் பற்றியவள் என்னபுள்ள இந்த வெயில்ல வந்திருக்கிங்க பனிநேரம் ஆறுதலா வந்திருக்கலாம் தானே" என்றாள்.

"எனக்கு நாளைக்குப் பிறந்தநாள் நான் முதல்ல அம்மம்மாவிடமும் அம்மப்பாவிடமும் சொல்ல வேண்டும் எண்டு உடனே கூட்டித்து வந்துத்தான்" என்றவளின் கண்கள் தன் அப்பாவைத் தேடின. சிறுவயதில் இருந்தே தன் அப்பாவைச் செல்லமாக "அப்பாக்குட்டி" என்று அழைத்தவள் "அம்மா அப்பாக்குட்டியைக் காணவில்லை எங்கே" என்று கேட்டாள். "அவர் புள்ள பென்சன் எடுக்கப் போறார்" ஏன் மாமி ஒரு போன் பண்ணியிருந்தால் நான் காரில் கொண்டு விட்டிருப்பேன் என்றார் மருமகன். உங்களுக்கு அவர் குணம் தெரியும் தானே யாரிடமும் உதவி கேட்க மாட்டார், "தன் வேலை யைத் தானே செய்யவேண்டும் என்று நினைப்பவர் என்றவள் "அவர் முக்கியமாக இன்று பென்சன் எடுக்கப் போறதன் காரணம் நாளைக்குத் தண்ட பேரன்ட நான்காவது பிறந்தநாள் அதுக்கு பிரசண்ட் வேண்டவேண்டும். ஏன்று சொல்லிக் கொண்டிருந்தார். "டேய் செல்லக்குட்டி நாளைக்கு அம்மம்மாவிற்கு என்ன தருவாய்" கேக் என்று செல்லமாகச் சொன்னான். "அம்மா அப்பாவையும் கூட்டித்து நாளைக்குக் காலையில நேரத்தோட வந்திருங்க. என்று சொல்லிட்டு அவர்கள் புறப்பட அவர்கள் மறையும் வரைக்கும் சாந்தா அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன்னுடைய கடந்தகால வாழ்க்கையினை எண்ணிப்பார்த்தவராக சுந்தரராஜன் வீதியில் போய்க்கொண்டிருந்தார். தான் ஆசிரியராக வந்தது காதலித்து சாந்தாவை மணந்து கொண்டது, வாடகை வீட்டில் இருந்தது தன் இரு பெண் பிள்ளைகளையும் வளர்க்க தானும் தன் மனைவியும் பட்ட துன்பங்கள் இன்று பெரிய நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருப்பது, "நான் இவ்வளவுக்கு எனது வாழ்க்கையினை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல எனக்கு உதவியது எனதுஆசிரியத் தொழிலும் அதன்மூலம் எனக்குக் கிடைத்த எனது சம்பளமும்தானே" என்று மனதுக்குள் எண்ணியவரின் சிந்தனையில் தன் மனைவி நேற்றிரவு கூறியது ஞாபகத்திற்கு வந்தது. "இஞ்ச நாளையண்டைக்கு நம்மட மூத்த மகள்ர மகன்ட பிறந்த நாள்" ஓ எனக்கும் ஞாபகம் இருக்குது" என்ற வார்த்தைகள் ஞாபத்திற்கு வந்தன.

சூரியனின் வெக்கை குடையைத் தாண்டி முகத்தில் சுட வேகமாக பென்சன் கந்தோரை அடைந்தார் சுந்தரராஜன். அங்கே கூட்டம் நிரம்பி வழிந்தது. "இன்று பென்சன் எடுத்த மாதிரித்தான்" என்று நினைத்தவர் சோர்ந்து போய் அங்கே கிடந்த ஒரு வாங்கில் உட்கார்ந்து நேரத்தைப் பார்த்தார். மணிக்கூடு 11.30 ஐக் காட்டியது. திடீர் என்று யாரோ "சேர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூப்பிடுவது தெரிந்தது; நிமிர்ந்து பார்த்தார். நவீன காலத்திற்கு ஏற்ப அழகாக உடையணிந்து ஒரு வாலிபன் மிடுக்காக நின்று கொண்டிருந்தான். சேர் என்னை மதிச்சிங்களா? தன் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்தவர் "No my dear I m sorry" என்று சொல்ல Sir உங்கட First appointment school ஐ நினைத்துப்பாருங்க. அங்கு அடிக்கடி Very good என்று பாராட்டிய மாணவனை ஞாபகம் இருக்குதா? Sir O/L பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியைப் பெறாத பாடசாலையில் நீங்க வந்த பிறகு நான்தான் அப்பாடசாலையில் ஆங்கிலத்தில் A எடுத்த ராகவன். Oh I see I can remember now. என்றவர் எழுந்து அவன் கைகளைக் குலுக்கினார்.

ஆளே அடையாளம் தெரியாம மாறித்திங்க மகன் என்ன மகன் இங்க நிக்கிறிங்க? "Sri நான் இங்கு புதிதாக Divisional Secretary (D.S) ஆக வந்திருக்கிறேன். உங்களை கண்ணாடி யன்னலூடாகக் கண்டேன் என்னால் உங்களை மறக்கவே முடியாதே சேர். ஏனென்றால் ஆங்கிலத்தில் சத்த சூனியமாக இருந்த நான் இன்று D S ஆக வந்திருக்கிறேன் என்றால் அதற்கு உங்கள் ஊக்கம்தான் காரணம் சேர்" என்றான். ஒரு கணம் சுந்தரராஜனுக்கு சொர்க்கம் தன் முன்னால் இருப்பது போன்ற ஒரு உணர்வும் பேரானந்தமும் ஏற்பட்டது.

தன் தொழிலை எந்த அளவிற்கு நேசித்தாரோ அந்த அளவிற்கு தன்னையும் தன் கற்பித்தலையும் நேசிக்கும் அளவிற்கு தான் நன்றாக சேவை செய்துள்ளேனே என்று நினைக்கையில் ஆனந்தமும், பெருமிதமும் ஏற்பட்டது. "சேர் என்ன வந்த நீங்க என்று கேட்டதும் தன் நினைவுக்கு வந்தவர் மகன் பென்சன் எடுக்க வந்தனான் என்றதும் "வாங்க சேர் என்று கூட்டிச்சென்று கண் இமைக்கும் நேரத்தில் எல்லாவற்றையும் முடித்து பென்சன் தொகையையும் கையில் கொடுத்தான் ராகவன். பியனைக் கூப்பிட்டு சேருக்கு ரீ கொண்டு வாங்க என்று சொல்ல, விசேட ரீ ஒன்றும் வந்தது. அதை சந்தோசமாக அருந்தியவர் Thank you very much son. என்று எழுந்து நிற்க போயிற்று வாங்க சேர் என்று அன்பாக சொன்னான் ராகவன்.

பென்சன் தொகையைப் பெற்றுக்கொண்ட சு. ராகவன் நடந்து வந்த களைப்பே தெரியாமல் இனிய நினைவுகளுடன் தான் முதன் முதலில் கற்பித்த பாடசாலையையும், ராகவனையும் எண்ணியவாறு அடிக்கடி தன் பென்சன் தொகையையும் பெருமிதத்துடன் தொட்டுப் பார்த்தவண்ணம் வீட்டை நோக்கி நடக்கிறார் சுந்தரராஜன்.

திருமதி. சிறிதேவி சங்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தோன்றிற் புகழுடன் தோன்றுக"
## வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் வீ. சு. கதிர்காமத்தம்பி



மட்டக்களப்பு கதிரவெளியை பிறப்பிடமாகவும் கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வீ. சு. கதிர்காமத்தம்பி தனக்கு மட்டுமன்றி சமூகத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்தவர்.

அன்னார் மட்டக்களப்பு ஊடகத்துறைக்கு பெரும்பங் காற்றியுள்ளதை நாம் கண்கூடாகக் காணலாம். இந்த வகையில் 1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் "வீரகேசரி" பத்திரிகையின் பிரதேச நிருபராக தன்னை இனங்காட்டி, பிற்பட்ட காலத்தில் மேற்படி பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.

அவர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரதேச பத்திரிகைகளாக வெளிவந்த விடிவானம், தினக்கதிர் ஆகிய பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக இருந்து தமிழ் கூறும் நல்லுலகுக்கு அளப்பரிய பணிகளை ஆற்றியவர்.

அத்தோடு இளைஞர்களால் வெளியிடப்பட்ட "தென்றல்" மாதாந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராக இருந்து பெரும் பணியாற்றினார்.

இவற்றைவிட ஊடகத்துறை சார்ந்து காலத்துக்காலம் ஊடகவியலாளர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு வலுச் சேர்த்தவர். இதற்கமைய இளம் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளித்து, இன்றைய ஊடகத்துறைக்கு அவர்களை இனங்காட்டிய பெருமை அன்னாரையே சாரும்.

இளம் ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி, சிரேஷ்ட ஊடகவியலா ளர்களும் வீ. சு. கதிர்காமத்தம்பியை அணுகி ஊடகத்துறைக்கு செய்திகளை எழுதும் நுட்பங்களை அறிந்து கொள்வார்கள்.

இவ்வாறு மட்டக்களப்பு ஊடகத்துறைக்கு பெரும் பங்காற்றிய அன்னாரது இழப்பு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டுமன்றி, முழு நாட்டுக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

— க. கிருபாகரன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநாட்டில் பாரம்பரிய கூத்துக்கலை

மங்காத புகழ் படைத்த மாமாங்க ஈஸ்வரரும், கொற்றவேள் குமரன் தங்தை கோயில் கொண்ட கொக்கட்டிச்சோலை தான் தோன்றி ஈஸ்வரரும் இயற்கையின் எழிலை இங்கு எடுத்து இயம்பும்.

கடலும் வாவியும் கல்லடிபாலத்தின் ஆழ் சமுத்திரத்தில் கலந்து பௌர்ணமி நிலவில் பண்ணிசை மீட்கும் இன்னிசை மீன்களின் எழில்மிகு வனப்பு இங்கு தான் உண்டு. இதற்கு உதாரணம் அடிகளார் ஆராட்சியில் எழுந்த யாழ்நூல்.

மீனினம் பாடுகின்ற தென்றால் இங்கு வாழும் மனித இனம் பாடாமல் இருக்குமா என்ன? இதன் அடிப்படையில் எழுந்தது தான் மட்டக்களப்பு மா நாட்டின் மாபெரும் சொத்தான கூத்துக்கலை என்றால் வியப்பில்லை. பள்ளிக்கூடம், பல்கலைக்கழகம் எனும் படிக்கட்டுக்களை ஏறாத பாமர மக்களால் இன்றும் கட்டிப் பேணிக்காத்து வரும் ஒரு பாரம்பரியக் கலை கூத்துக்கலையே அன்றி வேறில்லை.

நீண்ட பல வரலாறு கொண்டு எவராதும் மாற்ற முடியாத, அழிக்க முடியாத மரபுக்கலை என்பது ஆய்வாளர்கள் கூறும் அரும் பெரும் ஆழ்கருத்து.

கிராமிய வழக்கில் இக்கலை கூத்து என அழைக்கப்பட்டு வந்தது. இவ்வாறு அழைக்கப்பட்டாலும் இக்கலை பல வடிவமைப்புக்களைக் கொண்டுள்ளமையினால் இவை பல படிமுறைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளமையினால் இவை பல படிமுறைகளாக வகைப்படுத்த ப்பட்டுள்ளன.

அவை :-

1 – வடமோடிக் கூத்து
2 – தென்மோடிக் கூத்து
3 – விலாசம்
4 – மகுடிக் கூத்து
5 – வசந்தன் கூத்து
6 – பறைமேளக் கூத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆறு வகைக் கூத்துக்களும் மட்டக்களப்பில் சாதி அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ் வடிவங்கள் தாளம், மெட்டு, ஆடல், பாடல்களாக வெவ்வேறு வகையினைக் கொண்டுள்ளது.

வடமோடிக் கூத்து:- மட்டக்களப்பின் நகர்ப் பகுதிகளில் பெரும்பாலும் ஆடப்பட்டு வருகிறது. பாடுவான்கரை என அழைக்கப்படும் வயல் சார்ந்த பகுதிகளில் தென்மோடிக்கூத்து மிகப் பிரபல்யம் வாய்ந்ததாக காணப்படுகிறது.

இவ்விரு கூத்துக்களும் ஆடல், பாடல், தாளக்கட்டு, இசை, போன்றவற்றில் வித்தியாசமான அமைப்புக்களைக் கொண்டதாக காணப்படுகின்றன. இதற்கான அண்ணாவிமார்கள் பலவருடங்களாக பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

இவர்களுக்கான பயிற்சி கூத்து மேடைகளிலேயே நடைபெறுகின்றன. இவர்கள் பெரும்பாலும் கூத்தில் நடிகர்களாக ஆரம்பப் பயிற்சி பெறுகிறார்கள் அரைக்கூத்து, முழுக்கூத்து, கொப்பி பார்த்தல் போன்ற பயிற்சிகளில் தேர்ச்சி பெற்று, உதவி அண்ணாவிமார்களாக நீண்ட பயிற்சியைப் பெறுவார்கள். இது ஒரு குரு சிஷ்ய பரம்பரை முறையை ஒத்ததாகும்.

எனவே இங்கு அண்ணாவி என்று கூறும்போது செயல் முறை பயிற்சி வகுப்பு வழக்கத்தில் நடைபெறுவது இங்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும். இதற்கான காரணம் கூத்து வடிவங்களில் வரும் ஒவ்வொரு பாத்திர அமைப்புகளுக்கும் தாளக்கட்டுக்கள் வெவ்வேறு வகையினை கொண்டுள்ளமையினால் முறைப்படி தாளக்கட்டுக்களைப் பழக்கத்தில் கொண்டு வருதலே காரணமாகும்.

அடுத்து இவை இசை, மத்தளம், சல்லரி, சலங்கை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதனோடு ஒத்ததாக ஆடல், பாடல், அமைய வேண்டியது முக்கியமானதாகும். எனவே நடிகர்கள் தாமே மூன்று இசைகளுக்கும் ஒத்ததுபோல் தாளக்கட்டுகளுக்கு இசைவாக ஆடல் வேண்டும். இது ஒரு சட்ட முறையானதாக அமைக்கப்பட்டுள்ளது. எத்தனை தாளக்கட்டுக்கள் மாறி மாறி வந்தாலும் இசைக்கருவிகளுக்கு ஒத்துப்போகும் வண்ணம் ஆடப் படல் வேண்டும்.

இந்தப் பயிற்சிகள் வடமோடி, தென்மோடிக்கூத்துகளுக்கும் படி முறைப் பயிற்சி செயல் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இருமோடிக் கூத்துக்களுக்கும் வெவ்வேறு தாளக்கட்டுகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல்களும் உண்டு. எனவே இதற்கு அமைவாகவே கூத்துக்கள் ஆடப்படுகின்றன.

இவ்விரு கூத்துக்களின் படிமுறை திட்டங்கள் பல்வேறு சாயலைக் கொண்டிருக்கின்றன. அவை :-

1. கட்டம் கொடுத்தல்
2. கொட்டகை போடுதல்
3. சலங்கை கட்டுதல்
4. அரங்கேற்றம் செய்தல்

போன்ற முறைகள் இரு வகைக்கூத்துக்களுக்கும் பொதுவான படிமுறைகளாக காணப்படுகின்றன.

அத்தோடு இவ்விரு கூத்துக்களிலும் வரும் பாத்திரங்கள் குறிப்பாக கட்டியக்காரன், அரசன், அரசி, முரசறைவோன் போன்ற இன்னோரன்ன பாத்திரங்கள் ஒன்றாகவே அமையலாம். ஆனால் தாளக்கட்டுக்கள், ஆடல்கள் போன்றன வெவ்வேறாக காணப்படலாம்.

வடமோடிக் கூத்துக்கும் தென்மோடிக்கூத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. இவற்றில் வடமோடிக்கூத்தில் கூத்தர் வரவிற்கு வந்ததும் விருத்தம் பாட வேண்டும். பின் அண்ணாவியார் தாளக்கட்டை வைப்பார். அதன் பின் பாடல்கள் நடைபெறும்.

ஆனால் தென்மோடிக்கூத்தில் அப்படியில்லை. கூத்தர் வந்ததும் அண்ணாவியார் தாளக்கட்டை மத்தளமூலம் வைப்பார். இதில் வாய்ப்பாட்டுக்கு இடமில்லை. "ததித்துனா தக" எனும் தாளக்கட்டு மத்தள மூலம் ஆரம்ப தாளமாக அமையும் இவ்வாறே இவ்விரு கூத்துக்களும் ஆடப்படும்.

**விலாசம் :** விலாசம் மட்டக்களப்பில் பல வருடங்களுக்கு முன்பு ஆடப்பட்டு வந்தாலும், இக்கூத்து இன்று வழக்கில் இல்லை.

**மகுடிக்கூத்து :** இம்மகுடிக்கூத்து மட்டக்களப்பின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் ஆடப்பட்டு வந்திருக்கின்றன. இக் கூத்தில் கதை அம்சம், ஆடை அமைப்பு, பாடல்கள், தாளக்கட்டுக்கள் இல்லை. இது ஓர் கோமாளிக்கூத்து என இப்பகுதியில் அழைக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் மட்டக்களப்பிலுள்ள மாந்திரிகர்களை வெல்வதற்கு மலையாள மாந்திரிகர்கள் வந்தது போல ஒரு நடை முறை காணப்ப டுகிறது. இவை பேச்சு வழக்கில் சமயத்திற்கேற்ப ஆயத்தப் படுத்தப்படாமல் பேசப்படுகின்றன. நகைச்சுவை பாத்திரத்திற்கு குறவன், குறத்தி போன்ற வேடிக்கை நிகழ்வுகளும், கப்பலிலிருந்து வெள்ளைக்காரர்கள் வருவது போன்ற காட்சி அமைப்புக்களும் இங்கு காட்டப்படுகின்றன. இதில் பெரிய அளவில் நிகழ்வுகள் நடைபெறுவ தில்லை. இது ஒரு பொழுது போக்கு நிகழ்வு என்றே கூற வேண்டும்.

இதற்கு வாத்தியங்கள் இல்லை. இருந்தாலும் தவில், ஊதுகுழல் மட்டும் பாவிக்கப்படுகிறது. இது ஒரு முறையான பயிற்சியோ, திட்டமிடப்பட்டு கட்டமைப்புக்கு உட்படுத்தப்பட்டவையோ அல்ல. இது மட்டக்களப்பில் அருகிவிட்டது. எனலாம். காரணம் கல்வி அறிவும் கலைமாற்றமும் இடம் வழங்காதது தான் காரணமாகும்.

**வசந்தன் கூத்து :** வசந்தன் கூத்து வடமோடிக் கூத்துக்கள் போன்று திட்டமிட்ட கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்பட்ட ஒரு கூத்து முறையாகும். இதற்குள் ஆடல், பாடல், தாளம் போன்றவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை முக்கிய விழாக்கள், களியாட்டங்கள் போன்ற இடங்களில் இடம் பெறுவது வழக்கம். இக்கூத்து முறைமை கிட்டத்தட்ட 23 வகைக் கூத்தாக செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. இக் கூத்துக்களில் 23 வகைத்தாளக் கட்டுக்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

இவ் ஆடல், பாடல்கள் அனைத்தும் மத்தளம், சல்லரி போன்ற இசைக்கருவிகளுடன் பாடப்பட்டும், ஆடப்பட்டும் வருவது பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். இதற்கான அண்ணாவியர்கள் இப்பகுதியில் பிரத்தியேகமாக காணப்படுகின்றார்கள். இவர்கள் பாரம்பரிய நடைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு மரபு மாறாது ஆடிவருவது இக்கலைக்கு ஓர் அழகு. இன்றும் படுவான்கரைப் பகுதிகளில் நடைபெறும் கண்ணகி அம்மன் விழாக்கள், புதுவருட நிகழ்ச்சிகள், தைப்பொங்கல் நிகழ்வுகள் போன்றவற்றிலும் வசந்தன் கூத்து ஆடப்பட்டு வருகின்றன. இது கண்ணகி கோபம் கொண்டு மதுரையை எரித்த போது அவள் கோபம் தணிய ஆடப்பட்ட கூத்தாக காட்டப்படுகின்றது. இவ் ஆடலைப்பார்த்ததும் கண்ணகியின் கோபம் தணிந்து குளிர்ந்த முகத்துடன் காட்சி கொடுத்ததாகவும் கதைகள் உண்டு. இதனாலேயே ஒவ்வொரு வருடமும் கண்ணகிஅம்மன் ஆலய உற்சவ காலங்களில் இப்பாடல்கள் பாடப்பட்டு ஆடப்படுகின்றன. இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி பரவசமும் ஆடல்களில் பெரும் மதிப்பும் இப்பகுதியில் இதற்கு கொடுக்கப்படுகிறது என்றால் வியப்பில்லை.

**பறை மேளக் கூத்து :** மட்டக்களப்பில் வரலாற்று காலத்தை அடிப்படையாக நாம் எடுத்து நோக்கும்போது பறைமேளக்கூத்து ஓர் உன்னதமான இடத்தை வகிக்கிறது. இக்கூத்தை பறையர் என அழைக்கப்படுவோரே வந்திருக்கிறார்கள். இக்கூத்திலும் கதை அம்சம் இல்லை என்றாலும், இதில் காணப்படும் தாளங்கள் மிக முக்கியமான தாகும். அத்துடன் தாளங்களும் வகைப்படுத்தப்பட்டட்டிருக்கின்றன. ஆரம்ப காலங்களில் பூப்பு நீராட்டு விழா, திருமணவீடு, ஆலய உற்சவங்கள், செய்தி அறிவிப்புக்கள், மரணவீடுகள் போன்றவற்றிற்கும் வரவேற்பிற்கும் இப்பறைமேளம் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஆலய உற்சவங்களுக்கும், ஏனைய நிகழ்வுகளுக்கும் என தாளங்கள் வகைப்படுத்தப்பட்டும், ஆடல் - பாடல்கள் வெவ்வேறு தாளங்கள் கொண்டதாகவும் அமையப்பெற்றுள்ளதை நாம் கண்கூடாக கண்டோம். உதாரணமாக கண்டி மன்னன் மட்டக்களப்பிற்கு திறை வசூலிக்க வந்தபோது இங்குள்ள குறுநில மன்னர்கள் கண்டி மன்னனை வரவேற்க பறை மேளம் பாவித்ததாகவும், இம்மன்னன் பழுகாமம் கிராமம் ஊடாக வந்த வழி கண்டியன் அதர் என்று இன்றும் அழைக்கப்படுவது ஒரு சான்று ஆதாரமாகும்.

அடுத்து ஆலயங்களில் பறைமேளம் இசைக்கப்படுவதை நோக்கினால் :-

01. ஆரம்ப தாளம்
02. பெரிய பூசைத்தாளம்
03. சுற்றுத்தாளம்
04. நிறைவுத்தாளம்

– டாக்டர் எம். கந்தசாமி –

என வகைப்படுத்தலாம். இவ்வாறு விசேட அம்சங்களைக் கொண்ட இப்பறை மேள கூத்து இன்று மட்டக்களப்பில் உறங்கிக்கிடப்பது வேதனை தரும் நிகழ்ச்சி என்று கூறினால் வியப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் தோற்றமும், செயற்பாடுகளும்

மட்டக்களப்பு லயன்ஸ் கழகம் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக சட்டத்தரணி நவரட்ணராஜா நியமிக்கப்பட்டார்.




ஆரம்பகாலத்தில் 306 என்ற மாவட்டத்திற்குள் இருந்த எமது கழகம் தற்போது 306 என்ற மாவட்டத்திற்குள் இருக்கிறது. இந்த மாவட்டத்திற்குள் 94 கழகங்கள் அடக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எமது மாவட்ட ஆளுனர் கலாநிதி பிரியங்கா பத்தவிதான ஆவார். , t H xU gpugy t qf ; gpj p ngh Kf hi khs uht hH 1981/ 82ம் காலகட்டத்தில் எமது கழகத்தைச் சேர்ந்த லயன் அருணகிரி நாதன் உதவி மாவட்ட ஆளுனராக தெரிவு செய்யப்பட்டார்

எமது கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் சிலவற்றைக் கீழே பார்ப்போம்.

(01) 78ம் ஆண்டு ஏற்பட்ட புயல் அனர்த்தம் காரணமாக அல்லல்பட்ட மக்களுக்கு சமைத்த உணவும், உலர் உணவுப் பொருட்களும் கொடுத்து அவர்களின் அவலத்தை ஓரளவு நீக்கியது.

(02) வாகரையில் பொது மக்களின் பாவனைக்காக ஒருசில நன்நீர் கிணறுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது.

(03) காத்தான்குடியில் சிறுவர் பூங்கா ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

(04) வின்சன்ற் மகளிர் பாடசாலை, சிசிலியா மகளிர் பாடசாலை, புனித மைக்கேல் கல்லூரி போன்ற பாடசாலைகளில் துவிச்சக்கர வண்டிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05) மட்டக்களப்பு வைத்திய சாலையில் வெளிநோயாளரின் பாவனைக்காக ஓய்வு மண்டபமொன்று அமைத்துச் கொடுக்கப்பட்டது.

(06) மட்டக்களப்பு வைத்தியசாலையில் புற்று நோயாளர்களுக்காக ஒரு விடுதிகட்டிக் கொடுக்கப்பட்டது.

(07) இங்கு அவசர சிகிச்சை நிலையத்தைத் திருத்தி அமைத்து, ஒரு குளிரூட்டி சாதனமும் கொடுக்கப்பட்டது.

(08) இனமோதல் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கென 650 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

(09) ஏழை விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்காக 250 இலட்சம் ரூபா செலவில், விதை நெல், உரம், விவசாய இரசாயனங்கள், உபகரணங்கள் போன்றவை வழங்கப்பட்டன. இந்த திட்டத்திற்கு CARE என்ற சர்வதேச ஸ்தாபனம் அனுசரணை வழங்கியது.

(10) புல்லுமலைக் கிராமத்தில் ஒரு பாலர் பாடசாலையும், 20 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

(11) காலத்துக்குக்காலம் வைத்திய வசதியற்ற தூர இடங்களிலுள்ள கிராம மக்களுக்கென நடமாடும் வைத்திய முகாம்கள் நடாத்தப்பட்டு வருகிறது.

(12) விதவைகள் சுய தொழிலில் ஈடுபடுவதற்காக 12 க்கும் மேற்பட்ட தையல் இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

(13) சிறார்களுக்கென ஒரு பாடசாலை மட்டக்களப்பு பூம்புகாரில் யப்பானிய உதவியுடன் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

(14) 250 இலட்சம் ரூபா செலவில் கிணறு, மலசல கூடங்களும் கட்டிக் கொடுக்கப்பட்டன. இத்திட்டத்திற்கு ஒரு அவுஸ்திரேலிய தொண்டர் ஸ்தாபனம் நிதி உதவி வழங்கியது.

(15) லயன்ஸ் கழக நிலையத்துக்குச் செல்லும் வீதிக்கு "லயன்ஸ் கழக நிலைய வீதி" என பெயரிடப்பட்டது.

(16) சுனாமியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டது.

(17) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென கிரான்குளத்தில் 50 வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன.

(18) மலேரியா, டெங்கு போன்ற நுளம்பினால் ஏற்படக்கூடிய நோய்களைத் தடுக்கும் வகையில் கிராம மக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டது.

(19) கல்வி மேம்பாட்டுக்காக பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்களும், பண உதவிகளும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கழகம் 1974 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இதுவரை கீழ்க்காணும் கழகங்களை உருவாக்கியுள்ளது.

01. லயன்ஸ் கழகம், திருகோணமலை
02. லயன்ஸ் கழகம், கல்முனை
03. லயன்ஸ் கழகம், நிந்தவூர் (தற்போது செயலற்றுள்ளது)
04. லயன்ஸ் கழகம், அக்கரைப்பற்று
05. லயன்ஸ் கழகம், சம்மாந்துறை (தற்போது செயலற்றுள்ளது)
06. லயன்ஸ் கழகம், அம்பாறை
07. லயன்ஸ் கழகம், வாழைச்சேனை
08. லயன்ஸ் கழகம், களுவாஞ்சிகுடி
09. லயன்ஸ் கழகம், ஏறாவூர் – செங்கலடி
10. லயன்ஸ் கழகம், மட்டக்களப்பு பாடும் மீன்
11. லயன்ஸ் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம்

மேற்படி கழகங்களில் சில மிகச் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. இது எமது கழகத்துக்கு மிகுந்த பெருமையைத் தருகிறது.



லயன்ஸ் கழகங்களின் வழி நடத்தலில் இளைஞர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட லியோ கழகங்களும் பாரிய சேவைகளை மக்களுக்கு ஆற்றி வருகின்றன. எமது கழகத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் லியோ கழகம் 2000/2001ம் ஆண்டு உலகளாவிய நிலையில் திறம்பட செயற்பட்ட முதல் பத்து கழகங்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு, விருதுகளும் வழங்கப்பட்டன. அதன் தலைவர் லியோ விஜயபால அவ்வாண்டு சிறந்த லியோவாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாறாக பல அளப்பரிய பணிகளை ஆற்றி வரும் எமது மட்டக்களப்பு லயன்ஸ் கழகம் இனிவரும் காலங்களிலும் பல்வேறு செயற்திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளது.

**– லயன் ரி. பி. திருவருள் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றல்" சஞ்சிகையால் 2008ல் பாராட்டு பெறுவோர்



முழுப்பெயர் : பாவலர் சாந்தி முஹியித்தீன்

இடம் : காத்தான்குடி

துறை : கவிதை

**அனுபவம்** : கடந்த பல்லாண்டு காலமாக மட்டக்களப்பு நகர மத்தியில் இருந்து கொண்டு இலக்கிய உணர்வுகளில் மிதந்து. தமிழ் - முஸ்லிம் நட்புறவுப் பாலமாக இணைந்து. இன, மத உணர்வுகளை மறந்து சிறப்பாகச் செயல்பட்டு வருபவர் பாவலர் சாந்திமுஹியித்தீன்.

பேசும் மொழியால் பிணைந்தோர் பிரியார் என்ற எண்ணத்தை அடிநாதமாக்கி தமிழ் பேசும் மக்களிடையே இன உறவை எடுத்து பேசி வரும் பாவலரின் தமிழ்ப்பணிக்கு அன்னாருக்கு கிடைத்திருக்கின்ற ஆளுனர் விருது, கலாபூசணவிருது, அகில இலங்கை சமாதானவிருது, சிறந்த கலைஞருக்கான விருது, உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழாவில் பெற்ற மூதறிஞர் கௌரவம் ஆகியன தக்கசான்றுகளாகும்.

எங்களுக்குள் இருந்து எங்கள் உணர்வுகளோடு இணைந்து செந்தமிழ் தாயின் சிரேஷ்ட புதல்வர்களில் ஒருவராக, சிறந்த பேச்சாளராக, கவிஞராக மட்டுமல்லாது, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர்பேரவை, பாவலர் பண்ணை, நவ இலக்கிய மன்றம் ஆகியவைகளின் பணியாளராக செயற்பட்டுவரும் பாவலரின் நற்பண்பைப் பாராட்டி "தென்றல்" தேசிய கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியபீடம் 'தமிழ்சுடர்' என்னும் பட்டம் வழங்கி பாராட்டி கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

---



முழுப்பெயர் : இராசநாயகம். உதயகுமார்

இடம் : மட்டக்களப்பு

துறை : ஊடகம்

அனுபவம் : பாடசாலைப் பருவத்திலேயே (1977 ஆம் ஆண்டு) அப்போது வெளியான "ஈழநாடு" தினசரியின் மட்டக்களப்பு பிராந்திய செய்தியாளராக நியமனம் பெற்றார்.

அத்தோடு தினபதி, சிந்தாமணி, தினகரன், உதயன், சஞ்சிவி, ஆசிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் உட்பட உள்நாட்டு ஊடகங்களிலும், கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஒலிபரப்பு சேவைகளிலும் செய்தியாளராக பணியாற்றுகின்றார்.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக B.B.C உலக சேவையின் செய்தியாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இவருக்கு எமது "தென்றல்" ஆசிரியர் பீடம் "ஊடக ஜோதி" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பேருவகை அடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப் பெயர் : சிவலிங்கம் கந்தசாமி
இடம் : கல்லடி
துறை : ஓவியம்
**அனுபவம்** : இவருக்கு வழிகாட்டியாக தந்தை, அம்மப்பா இருந்ததாகவும், இவர்கள் இருவரும் கலைத்துறையில் சிறந்து விளங்கிய, தாகவும் குறிப்பிடுகிறார்.

"குகன்" என்ற பெயரிலேயே ஓவியங்களை வரைகிறார். இவரது கைவண்ணத்தில் கிழக்கு மாகாணக் கோயில்களில் திரைச் சீலைகள் உருவாகியுள்ளதைக் காணலாம்.

அத்தோடு ஸ்ரீ இராம கிருஷ்ணமிஷன், பாடசாலைகள் ஆகிய இடங்களிலும் இவரது ஓவியங்கள் காணப்படுகின்றன. இவர் கடந்த 29 வருடங்கள் விவசாய இலாகாவில் பணியாற்றி விட்டு, ஓய்வு பெற்றுள்ளார். ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து முழுநேர ஓவியராக தனது பணியை செய்கிறார்.

இவர் இந்திய பிரபல ஓவியர்களான மாதவன், மணி, செல்வம், மாருதி சுப்பையா, இராமலிங்கம் போன்றோரின் ஓவியங்களை விரும்புவதாகவும் குறிப்பிடுகிறார். இவருக்கு "தென்றல்" சஞ்சிகையின் ஆசிரிய பீடம் "சிந்தனைச் சிற்பி" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பேருவகை அடைகிறது.

---



முழுப்பெயர் : **திருமதி. ராதிகா தேவகுமார்**
இடம் : **கல்லடி**
துறை : **(ஊடகம் – சிறப்பு விருது)**
**அனுபவம்** : 14 வருட ஊடகசேவை. தினக்கதிர், சக்தி FM, லேக்கவுஸ் ஊடகவியலாளர். இன்ரநியூஸ் சர்வதேச, நிறுவனத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலை "உண்மைக்குரல்கள்" எனும் வானொலி நிகழ்ச்சியாக தொடர்ந்து 3 வருடங்களாகக் கொண்டு வந்தவர். இன்டநியூஸ் சர்வதேச நிறுவனத்தின் கிழக்கு ஊடக இல்லத்தில் தயாரிப்பு இணைப்பாளராக கடமையாற்றி பல வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்ததுடன், அங்கு இளம் ஊடகவியலாளர்களைப் பயிற்றுவிப்பதில் பெரும் பங்காற்றியவர்.

மட்டக்களப்பு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக பணியாற்றி வருவதுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தமது தொழிலை மீளவும் தொடங்க ஒன்றியத்தினூடாக பல திட்டங்களை முன்னெடுத்தவர்.மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் சர்வதேச தரத்திலான பயிற்சிகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு உதவியவர்.

ஊடக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார்.

சர்வதேச ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பவை இணைந்து நடாத்திய மக்கள் ஊடக சேவையில் கசிப்புத் தன்மைக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய விருது – 2007 மற்றும் சகிப்புத் தன்மைக்கான கிழக்கு மாகாண விருது – 2007 ஆகியவை இவருக்கு வழங்கப்பட்டது

மட்டக்களப்பில் இடம்பெயர்ந்தமக்களின் குரல்களை வெளிக்கொண்டு வந்தமைக்காக இவருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் சுதந்திர ஊடக இயக்கம், முஸ்லிம் மீடியா போரம் ஆகியவற்றின் நடுவர்குழு இவரை இந்த விருதுகளுக்காக தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு தென்றல் ஆசிரிய பீட ஆலோசகர் வீ. சு கதிர்காமத்தம்பி ஞாபகார்த்தமாக "வீ. சு கதிர்காமத்தம்பி விருது" வழங்கி கௌரவிப்பதில் "தென்றல்" ஆசிரிய பீடம் பேருவகை அடைகிறது.

---



**முழுப்பெயர்** : **திருமதி. விமலாவதி. நடராசா**

**இடம்** : **கல்லடி**

**துறை** : **விஞ்ஞானக்கல்வி**

**அனுபவம்** : 34 வருடங்கள் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 இல் 10 வருடங்கள் திருகோணமலையில் 8 வருடங்கள், மட்டக்களப்பு – 26 வருடங்கள்

இவருக்கு எமது தென்றல் சஞ்சிகையின் ஆசிரிய பீடம் "ஆசிரிய சிரோன்மணி" விருது வழங்கிக் கௌரவிப்பதில்பேருவகை அடைகிறது.

---



## 1வது பிறந்ததின வாழ்த்து

மட்டக்களப்பு - கல்லடியைச் சேர்ந்த கிருபாகரன் - கவிதா தம்பதிகளின் செல்வப்புதல்வி 19. 02. 2008 அன்று முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, பெரியமாமா, பெரியமாமி, புருஷோத்தமன் அத்தான், சின்னமாமா, சின்னமாமி, சகீஸ்கர் அத்தான், தக்ஷணியா மச்சாள், அம்மப்பா, மாமா, மாமி மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பேச்சியம்மன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அக்கரை மாணிக்கம்)


## "தென்றல்" சஞ்சிகை வெளிவருவதற்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

| | |
|---|---|
| **சுபாஜினி ஜீவலர்ஸ்**<br>51, பிரதான வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2224863 | **தெளி நகைமாளிகை**<br>15, முனை வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222838 |
| **மீனாட்சி ஜீவலி**<br>9, முனைவீதி, 1ம் குறுக்கு, மட்டக்களப்பு<br>Tel : 065-2226993, 077-7733779 | **தேவி நகை மாளிகை**<br>25, முனை வீதி, மட்டக்களப்பு<br>Tel: 065-2224155 |
| **புனைட்ட புத்தகசாலை**<br>53, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222103, Fax : 065-2225434 | **New Batticaloa medicals**<br>18, பார் வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2224400, 065-2223515 |
| **பெனசீஸ்**<br>102 (58) பிரதான வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222215 | **ராஜாஸ் புத்தக நிலையம்**<br>111, பிரதான வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222371, Fax : 065-225341 |
| **பிலால் எம்போரியம்**<br>38, மகாத்மா காந்திவீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222400, 0777-597433 | **நியூ மர்ழியாஸ்**<br>82, பிரதான வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222900 |
| **சன்சை பேக்கரி**<br>136, திருமலை வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2225159 | **நியூ அஸீக் ரேடர்ஸ்**<br>12, 14, பளர் வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222116, 065-2224010 |

### மொடன் ஜூவலரி

**பிரதான தலைமையகம்**

இல 132/2, செட்டியார் தெரு, கொழும்பு - 11

Tel : 011-2421026, 011-2473069, 011-4710405, 0777-845272

| | |
|---|---|
| **கிளை**<br>18, மத்திய வீதி, மட்டக்களப்பு<br>Tel : 065-2222528, 065-2223644 | **காட்சியகம்**<br>32, சர்க்கரைவீதி, காத்தான்குடி<br>Tel : 065-2245081 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்றல்" சஞ்சிகை வெளிவருவதற்கு எமது
மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

# IT SOLUTION

**கம்பியூட்டர் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய
நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்**

**கம்பியூட்டரையும் அதன் பாகங்களையும்
மெத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்**

**உங்கள் பழுதடைந்த கம்பியூட்டர்களை நம்பிக்கையுடனும்
விரைவாகவும் உத்தரவாதத்துடனும் திருத்திக் கொள்ளவும்
நாடவேண்டிய இடம்.**

intel

IT SOLUTION

intel Core 2 Quad inside

233, Trinco Road, Batticaloa
Tel: 065 2224857 Email : Itsolution@sltnet.lk
info@itsolutionweb.com, www.itsolutionweb.com

intel Centrino Duo

**Service Center :**

**IT Solution**
49/1D, Station cross Road, Batticaloa
Tel. 065 49000141

intel Centrino Duo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால காப்புறுத்த் தேவைகளை (நீங்கள்) உங்களது
தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ள

JANASHAKTHI
INSURANCE

ஜனசக்தி காப்புறுத்க் கம்பனியில்
ஓர் வாய்ப்பு

அனைத்துவித ஆயுள், பொது காப்புறுதிகள் எம்வசம்




வாகனக் காப்புறுதி



வீடு, கடைகளுக்கானது




ஓய்வூதியத் திட்டம்




புதிய அறிமுகம்
ஜனசக்தி
பஞ்சாயுதம்

6 மாதம் முதல்
18 வயது வரையான
பிள்ளைகளுக்கான காப்புறுதி

தொடர்புகளுக்கு - ஜனசக்தி காப்புறுதி கம்பனி
மாவட்டக்காரியாலயம், மட்டக்களப்பு

தொலைபேசி இல 065 - 2223904, 065 - 2226360


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printers & Video Vision
43, Trinco Road, Batticaloa